கிருபையுள்ள வார்த்தை

# பிரசங்க குறிப்புகள்

# SERMON OUTLINES

**VOLUME 1**

**World Literature Publication**
Madurai (India)

# *SERMON OUTLINES (TAMIL)*

*Copyright 2015* - J.C. School of Evangelism

First Printing : September 2015

Layout & Proof Reading : Kingsly Rajah, Camiluz Karthick & Antony Rajah

Written & Published by : **P.C. PHILEMON RAJAH** M.Th.,
Director - J.C. School of Evangelism

Printed at : Thee Classic Printers
Madurai - 625 001
Phone : 0452 - 2323819

*For Copies...*

**J.C. SCHOOL OF EVANGELISM**
45 C/1, Church Lane, Coronation Street
Arasaradi, Madurai - 625 016
Phone : 0452 - 26 070 26
Cell : 92 4421 4421, 92 4431 4431
Visit us : www.graciousword.org
Email : obey2jesus@gmail.com

# சமர்ப்பணம்




கர்த்தருடைய ஊழியத்தில் என்னை ஊக்கப்படுத்திய

காலம் சென்ற சகோதரன்

## ஜே.சி. சோட் (J.C. CHOATE)

அவர்களுக்கு

இப்புத்தகத்தை சமர்ப்பிக்கிறேன்.



# என்னுரை

**"நான் சாவாமல், பிழைத்திருந்து,**
**கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்"**
(சங் 118:17)

இப்படிப்பட்ட தனியாத தாகம் கொண்டுள்ள பிரசங்கியார்களும், சுவிஷேச ஊழியம் செய்ய பாரம் கொண்ட விசுவாசிகளும் பயன்பெறும் வகையில், இந்த பிரசங்க குறிப்பு புத்தகத்தை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். யார் ஒருவரும் எளிதாக பயன்படுத்தும் வகையில் முறையாக தொகுக்கப்பெற்ற இந்த பிரசங்க குறிப்புகள் அனைத்தும், பல்வேறு தொலைக்காட்சிகளில் நம்முடைய கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியின் மூலம் அடியேன் பேசி, ஒளிபரப்பப்பட்ட T.V. செய்திகளின் தொகுப்பாகும். போதகர்களுக்கு மட்டுமின்றி விசுவாசிகளின் வேதஞான விருத்திக்கும், தனிநபருக்கோ ஒரு கூட்ட மக்களுக்கோ எளிமையாக வேதாகம மகத்துவங்களை போதிக்கவும் இத்தொகுப்பு உதவும் என விசுவாசிக்கிறேன். தாறுமாறாக போதிக்கப்படும் பிரசங்கங்களுக்கு மத்தியில், மத் 28:18-20ல் ஆண்டவர் தன் அப்போஸ்தலர்கள் மூலம் உலகம் முழுவதும் உள்ள மக்கள் அறிந்துகொள்ள விரும்பியதை மட்டும் இந்நூலின் பிரசங்கங்கள் வெளிப்படுத்த வேண்டுமென்பதே என் உள்ளத்து வாஞ்சை.

இந்நூல் வெளிவர எனக்கு உதவிய என் நீண்டகால ஆலோசகர்களும், ஊக்கவிப்பாளர்களுமாகிய சகோதரி BETTY CHOATE, சகோ. JERRY BATES மற்றும் சகோதரி PAULA BATES ஆகியோருக்கு என் நன்றியை உளமாற பகிர்கின்றேன்.

இந்நூல் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கும், மற்றவர்களுக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்தும் முயற்சிக்கும் ஒரு கருவியாக பயன்பட வேண்டும் என்பதே என்னுடைய ஜெபம். கடவுள் உங்களை ஆசிர்வதிப்பாராக!

அன்புடன்
உங்கள் சகோதரன்
**P.C. பிலேமோன் ராஜா**

# புத்தகத்தின் உள்ளே...


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | உங்கள் ஆவிக்குரிய நிலை என்ன?... | 1 |
| 2. | நியாயத்தீர்ப்பின் நாளுக்கு நீங்கள் ஆயத்தமா? | 3 |
| 3. | அகந்தை | 5 |
| 4. | பொருளாசை | 7 |
| 5. | நிலைத்திருங்கள் | 10 |
| 6. | வைராக்கியமாயிருங்கள் | 12 |
| 7. | குடும்பத்தை அழகாக அலங்கரியுங்கள் | 15 |
| 8. | தம்பதிகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும்போது... | 18 |
| 9. | சிலுவையும், கிறிஸ்தவனும்... | 22 |
| 10. | தீர்மானம் | 25 |
| 11. | ஆசைகள் | 27 |
| 12. | தாழ்மையை அழிப்பவை... | 29 |
| 13. | சபை என்ற ராஜ்ஜியத்தின் மதிப்பு உங்களுக்கு தெரியுமா? | 31 |
| 14. | பொறாமை | 36 |
| 15. | என்னைப் பின்பற்றி வா... | 39 |
| 16. | இயேசுவின் இரத்தத்தினால் கிடைப்பவை... | 41 |
| 17. | இயேசுவினுடைய வாழ்வில் ஆவியானவர் | 42 |
| 18. | பரிசுத்தம் | 45 |
| 19. | கடவுளை நம்புபவர்கள், நாள் பார்க்கலாமா? | 49 |
| 20. | சிறிய பொருள், பெரிய காரியம் ! | 52 |

# புத்தகத்தின் உள்ளே...


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 21. | சபைக்கு பயன்படாதவர்கள் ! | 54 |
| 22. | பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பலிகள் ! | 57 |
| 23. | நியாயப்பிரமாணம் | 59 |
| 24. | உண்மையுள்ள தேவன் | 63 |
| 25. | மத்தேயு புத்தகத்தில் ஜெபம் | 65 |
| 26. | தானியேலின் வெற்றியுள்ள ஜெபம் | 67 |
| 27. | ஆராதனை வேளையில் இருக்க வேண்டிய மனோநிலை | 69 |
| 28. | பாடுகளுக்கு காரணம்... | 70 |
| 29. | ஆராதனை அல்லது சபை கூடுதலின் நோக்கம் | 73 |
| 30. | நீதிமான் | 75 |
| 31. | ஓடுங்கள் | 78 |
| 32. | சத்தியம் | 81 |
| 33. | விழுந்துபோதல் | 86 |
| 34. | யார் செழித்திருப்பார்கள்? | 88 |
| 35. | பாடுகளை தேவன் ஏன் அனுமதிக்கின்றார்? | 90 |
| 36. | தேவனை தொழுதுகொள்ளும்போது இருக்க வேண்டிய... | 94 |
| 37. | வேதாகம தேவனுடைய தன்மை ! | 95 |

# உங்கள் ஆவிக்குரிய நிலை என்ன?
## உயிருள்ளவர்களா? மரித்தவர்களா?

**I *சிலுவை செய்தியை கேட்டதும் இயங்குகிறீர்களா? இயங்க மறுக்கிறீர்களா?***

1 கொரி 1:18 "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது".

**II *ஆதி அன்பு உங்களிடம் இன்றும் உள்ளதா? அதை விட்டுவிட்டீர்களா?***

வெளி 2:4 "ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு".

**III *சபைக்கு ஆசையுடன் போகின்றீர்களா? விருப்பமில்லாமல் செல்கின்றீரா?***

சங் 122:1 "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்".

**IV *உங்களுக்கு ஆத்தும ஆதாய சேவையில் ஈடுபாடு உண்டா? இல்லையா? அப்படிப்பட்ட திட்டமாவது உள்ளதா?***

ரோமர் 1:14-15 "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்".

**V *உங்களுடைய ஆசையும், ஈர்ப்பும் எதின்மீது? உலக காரியங்களிலா, ஆவிக்குரிய காரியங்களிலா?***

2 தீமோ 4:10 "ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான் ; கிரேஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்".

**VI *செய்ய முடியாதவைகளுக்காக காரணம் கண்டுபிடித்து உங்களை ஏமாற்றிக் கொள்கிறீர்களா?***

மத் 25:24, 25 "ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து; ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்". ஆகையால், நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்.

**VII நீங்கள் செய்ய வேண்டியதை அறிந்தும் செய்யத் தவறுகிறீர்களா?**

யாக் 4:17 "ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்".

**VIII நீங்கள் ஆராதனைக்கு வாரந்தவறாமல் செல்கிறீர்களா?**

எபி 10:25 "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்".

**IX நீங்கள் சபைக்கு சென்று மட்டும் வருகிறீர்களா? அல்லது சபை காரியங்களில் ஈடுபாடும் உள்ளதா?**

எபி 10:24 "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து".

**X உங்கள் வாழ்வு தேவனை பிரியப்படுத்தவா? உதாசீனப்படுத்துவதற்கா?**

கலா 1:10 "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாக இருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே?".

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உங்களது பதில் என்ன? ஆம், அல்லது இல்லை, அல்லது பரவாயில்லை என்பதாக உள்ளதா? உங்கள் பதில் "ஆம்" என்றால், நீங்கள் உயிருள்ளவர்; "இல்லை" என்றால் மரித்துள்ளீர்கள்; "பரவாயில்லை" என்றால், மரணத்துக்கேதுவான நோய் கொண்டவர் நீங்கள். இதில் நீங்கள் யார்?

# நியாயத்தீர்ப்பின் நாளுக்கு நீங்கள் ஆயத்தமா?

ரோமர்:2:1,16 – "ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய்".

"என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும்".

❖ நீதி கையளிக்கப்பட்டு, தவறுகள் யாவும் நேர்ப்படுத்தப்படும் இந்த உச்சக்கட்டமான நாளை நோக்கி வரலாறு தயக்கமின்றி நகர்ந்துக் கொண்டிருக்கிறது. அந்த நாளுக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா ?

**I. நியாயத்தீர்ப்பு, தப்பிக்க இயலாததாக உள்ளது** [ரோம 2:1 - 5]

அ. தேவன் நீதியின்படியே நியாயந்தீர்ப்பார்

இன்னொருவருடைய வாழ்வில் உள்ள பாவங்களைக் நாம் காண்பது மிகவும் சுலபமாக உள்ளது. அதையே ஒருவர் தனக்குள் இருப்பதைக் காணுதல் என்பது மிகவும் கடினமாக உள்ளது.

"ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக்குறித்துச் சொல்லுகிற, தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?" [ரோமர் 2:1-3]

தேவனுடைய நீதிமன்றத்தில் தவறான புரிந்துக்கொள்ளுதலோ, தவறான பிரதிநீதித்துவபடுத்துதலோ, நீதியை தவறாக எடுத்துச் சொல்லுதலோ மற்றும் வேறு எந்த தவறுகள் எதுவுமே இராது. மேலும், யாவும் சத்தியத்தின் படியே இருக்கும். எவரொருவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க இயலாது. அதில் நம்பிக்கையில்லை; என்றோ வரமுடியாது என்றோ யாரும் கூறவும் முடியாது.

ஆ. மனம் வருந்தாதவர்களை தேவன் நியாயந்தீர்ப்பார்

தேவன் அவர்களுக்கு மனம்திரும்பும்படி நேரம் மற்றும் வாய்ப்புகளை கொடுத்தார். அவர்களோ தேவனுடைய தயவை, தேவன் தங்களது பாவங்களை காணமல் விட்டுவிட்டார், என்பதற்கு அடையாளமாக எடுத்துக்கொண்டார்கள். [ரோம 2:4].

ஒருவர் பாவங்களை செய்கிறார்; ஆனால் அவருக்கு ஒன்றும் நேர்வதில்லை, அவரை தேவன் அந்த இடத்திலேயே அடித்து வீழ்த்துவதில்லை; அவரோ தேவனுக்கும் தனக்கும் உள்ள உறவு சரியாக இருக்கிறது என்று நினைத்துக்கொள்கிறார். ஆயினும், அந்த நாள் எப்பொழுது வருமென்று யாருக்கும் தெரியாது; ஆனால் நேற்றைவிட இன்று அந்த நாளுக்கு அண்மையில், வெகு அண்மையில் உள்ளது.

இ. தேவன் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்ப்பார்

குற்றம் செய்தவர் மனிதர்களுடைய நியாயத்தீர்புக்கு தப்பித்துக்கொள்ளலாம், தண்டனை விதிக்கப்பட்டாலும் கூட, அவர்கள் சிறைத்தண்டனையில் இருந்து வழக்கறிஞர்கள் மூலமாக தப்பித்துக்கொள்ளலாம். [ரோம 2:3]. தேவனுடைய நியாயத்தீர்ப்பில் எந்த ஒரு பாவமும் கண்டறியபடாமல் போகாது [எபி 4:13], எந்தப்பாவியும் நியாயத்தீர்ப்பு நாளில் இல்லாது போகமாட்டார் [வெளி 20:12].

**II. நியாயத்தீர்ப்பு நாள் வழக்கிட இயலாதக ஒன்றாக இருக்கும்** [ரோம 2:6 -11]

அ. தேவன் நமது கிரியைகளுக்கு தக்கவாறு நியாயந்தீர்ப்பார்.

கிரியைகள் விதைகளைப் போன்றுள்ளன; இப்பொழுது நீங்கள் அவற்றை விதைக்கிறீர்கள், பிற்பாடு அவற்றை நீங்கள் அறுவடை செய்வீர்கள் [2 கொரி 5: 10].

ஆ. விதிவிலக்குகள் எதுவும் இராது.

நியாயத்தீர்ப்பில் விதிவிலக்குகள் எதுவும் இருக்குமா ? இல்லை. பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவிற்கும் தண்டனை உண்டு. [ரோம 2:9 - 11].

**III. நியாயத்தீர்ப்பு பட்சபாதமற்றதாக பாகுபாடு இல்லாததாக இருக்கும்** [ரோம 2:12 -15]

அ. உலகில் உள்ள அனைத்து மனித இனமும் நியாயந்தீர்க்கப்படுவர்

நியாயப்பிரமாணம் இல்லாமல், செய்கிறவர்களுக்கு நியாயப் பிரமாணமில்லாமல், நியாயப்பிரமாணத்துடன் செய்கிறவர்களுக்கு நியாயப் பிரமாணத்தின்படியும் நியாயத்தீர்ப்பு இருக்கும், [ரோம 2:12-13] நாம் சிலரிடத்தில் கனிவாக, சிலரிடத்தில் கடினமாக நடந்துக்கொள்கிறோம். ஆனால் தேவன் பட்சபாதமில்லாதவர் [உபா 10:17].

ஆ. எல்லாரும் நியாயமாய் நியாயந்தீர்க்கப்படுவோம், எல்லாருக்கும் தேவனுடைய நீதி அவசியமாயிருக்கிறது [ரோம 2:14- 15].

**IV. நியாயத்தீர்ப்பு தவிர்க்க இயலாததாக இருக்கும்** [ரோம 2 : 16]

அந்தரங்கம் என்பது, மற்றவருக்கு தெரியாத நமது சிந்தனைகள், நோக்கங்கள், கேட்கப்படாத வார்த்தைகள், மற்றும் செயல்களைக் குறிக்கிறது. [ரோம 2:16; அப் 17:31]. சிலர், அன்பான தேவன் எவரொருவரையும் நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்று நம்புகின்றனர். இயேசு நம்முடைய இரட்சகர் மட்டுமல்ல, நம்முடைய நியாயாதிபதியும் அவரே [யோவா 5:22].

# அகந்தை

**I இது தேவன் வெறுக்கும் குணம்**

நீதி 8:13 "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்."

**II அகந்தை தரக்கூடிய பரிசுகள்**

அ. அவமானம்

நீதி 11:2 "அகந்தை வந்தால் இலச்சையும் வரும்; தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு.

ஆ. சண்டை

நீதி 13:10 "அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலே ஞானம் உண்டு.

இ. தாழ்ச்சி

நீதி 29 : 23 'மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மையுள்ளவனே கனமடைவான்."

ஈ. தேவன் தேடிப்பிடித்து தாழ்த்துகிறார்

யோபு 40:11 "நீ உன் கோபத்தின் உக்கிரத்தை வீசி, அகந்தையுள்ளவனையெல்லாம் தேடிப்பார்த்து தாழ்த்திவிட்டு"

உ. மோசம் போக்கும், வீழ்ந்து போவோம்:

எரே 49:16 "கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி, மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிறவனே உன்னால் உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம்போக்கிற்று; நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்".

ஊ. அழிவினை உண்டாக்கும்:

லூக் 1:51 "தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்"

நீதி 16:18 "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை".

**III அகந்தை எப்படி வெளிப்படும்**

அ. பேச்சின் மூலமாக....

1 சாமு 2:3 "இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள்; அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; கர்த்தர் ஞானமுள்ள தேவன்; அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ?"

ஆ. வீண்வார்த்தையின் மூலமாக....

2 பேதுரு 2:18 "வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத்தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்".

இ. கொடுமையான பேச்சின் மூலமாக....

சங் 73:8 "அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள்; இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்".

**IV அகந்தையானவர்களை வேதம் துன்மார்க்கர் என்று கூறுகிறது. துன்மார்க்கர் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது.**

நீதி 21:4 "மேட்டிமையான பார்வையும் அகந்தையான மனமுமுள்ள துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே".

# பொருளாசை

## I பொருளாசையின் பிறப்பிடம் இருதயமே!

மாற் 7:21-22 "எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்".

பொருளாசை இல்லதாவர்களே தேவனுக்கு தேவை. மேலும், தேவன் பொருளாசையை வெறுக்கிறவர்களை தனக்காக தேர்ந்தெடுக்கிறார்.

யாத் 18:21"ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும்".

தேவன் உன்னை பயன்படுத்த நீ ஞானியாகவோ, பலசாலியாகவோ, அந்தஸ்துள்ளவனாகவோ, மரியாதைக்குரியவனாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பொருளாசை இல்லாதவனாக இருக்க வேண்டும். பணக்கார வாலிபன் கிறிஸ்துவிடம் வந்தும், கிறிஸ்துவிற்குள் வரமுடியாமல் போனதற்கு காரணம் பொருளாசையே! இன்றும் அநேகருடைய நிலைமை இப்படிப்பட்டதாகத்தான் இருக்கிறது என்பது எவ்வளவு வேதனைக்குரியது.

## II பொருளாசையின் தன்மைகள்

அ. பொருளாசை லஞ்சம் வாங்கும், நியாயத்தை புரட்டும் வலிமையுடையது.

1 சாமு 8:3 "ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்".

ஆ. பொருளாசை தன்னுடையவர்களின் உயிரை வாங்கும் வலிமையுடையது.

நீதி 1:19 "பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே; இது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும்".

இ. பொருளாசை என்பது அக்கிரமம்; அது தேவ தண்டனைக்கு நம்மை உட்படுத்தும் வலிமையுடையது.

ஏசா 57:17 "நான் அவர்கள் பொருளாசையென்னும் அக்கிரமத்தினிமித்தம் கடுங்கோபமாகி, அவர்களை அடித்தேன்; நான் மறைந்து, கடுங்கோபமாயிருந்தேன்; தங்கள் மனம்போனபோக்கிலே மாறுபாடாய் நடந்தார்களே".

ஈ. பொருளாசை தேவனை நமக்கு எதிராக (எதிராளியாக) மாற்றும் வலிமையுடையது.

எரே 51:13 "திரளான தண்ணீர்களின்மேல் வாசம்பண்ணுகிறவளே, திரண்ட சம்பத்துடையவளே, உனக்கு முடிவும் உன் பொருளாசைக்கு ஒழிவும் வந்தது".

உ. பொருளாசை நம்மை கர்த்தரை மறக்கச்செய்யும் வலிமையுடையது.

எசே 22:12 "இரத்தஞ்சிந்தும்படிக்குப் பரிதானம் வாங்கினவர்கள் உன்னில் இருக்கிறார்கள்; நீ வட்டியையும் பொலிசையையும் வாங்கி பொருளாசையினால் உன் அயலானுக்கு இடுக்கண், செய்து, என்னை மறந்து போனாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்".

ஊ. பொருளாசை என்பது நம்மை சாபத்தின் பிள்ளைகளாக்கும் வலிமையுடையது.

2 பேது 2:14 "விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்".

எ. பொருளாசையுடையவர்கள் தேவ தண்டனைக்கு தப்பவே முடியாது.

2 பேது 2:3 "பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திரா து, அவர்களுடைய அழிவு உறங்காது".

**III பொருளாசைக்கு எதிராக நாம் எப்படி செயல்பட வேண்டும்.**

அ. பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

லூக் 12:15 "பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்".

ஆ. பொருளாசை என்னும் பெயர்க்கூட, தேவன் தன்னுடைய பிள்ளைகளிடத்தில் காணப்பட விரும்பவில்லை என்பதை அறியுங்கள்.

எபே 5:3 "மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது".

இ பொருளாசை என்பது விக்கிரக ஆராதனைக்கு சமம்

நீங்கள் பொருளாசை உள்ளவனாக இருப்பதும் விக்கிரகங்களை வழிபடுவதும் ஒன்றுதான்.

எபே 5:5 "விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய

பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே".

கொலோ 3:5 "ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்".

ஈ. ஜெபியுங்கள்.

சங் 119 : 36 "என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்".

உ. சாட்சிகளாய் ஜீவிக்க வேண்டும்.

1 தெச 2:5 "உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை; தேவனே சாட்சி".

ஊ. பொருளாசையை வெறுக்கிறது தீர்க்காயுசை கொண்டுவரும்.

நீதி 28:16 "பிரபு புத்தியீனனாயிருந்தால் அவன் செய்யும் இடுக்கண் மிகுதி; பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான்".

# நிலைத்திருங்கள்

**I நம்முடைய வாழ்க்கை நிலையற்றது!**

1 நாளா 29 : 15 "உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்; பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது; நிலைத்திருப்போம் என்னும் நம்பிக்கையில்லை".

**இந்த நிலையற்ற வாழ்விலே, நாம் சிலவற்றில் நிலைத்திருக்க வேண்டும் என வேதம் கூறுகிறது.**

1 கொரி 7:20-21 "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன் அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்".

**II அன்பிலே நிலைத்திரு**

யோவா 15:9 " பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல, நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்".

எபி 13:1 "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது".

வெளி 2 : 4 "ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு".

**III விசுவாசத்திலே நிலைத்திரு**

1 கொரி 16:13 "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்".

2 தீமோ 1:5 "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன்தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும், நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்".

யூதா 3 "... பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது".

**IV உபதேசத்திலே நிலைத்திரு**

யோவா 8:31 "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்".

2 தீமோ 3 : 14 "நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு....".

## V உபத்திரவத்திலே நிலைத்திரு

மத் 13:21 "ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்".

அப் 14:22 "சீஷருடைய மனதைக் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்".

## VI கிறிஸ்துவிலே நிலைத்திரு

யோவா 6:56 "என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்".

யோவா 15:4,5 "என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது".

## VII மரண பரியந்தம் நிலைத்திரு

மத் 10:22 "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்".

வெளி 2:10 "நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்".

# வைராக்கியமாயிருங்கள்

**I நம்முடைய தேவன் வைராக்கியமுள்ளவர்**

ஏசா 59:17 "அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொண்டார்".

**II நம்முடைய ஆண்டவர் இயேசு வைராக்கியமுள்ளவர்**

யோவா 2:13 - 17 "பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய், தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபாரவீடாக்காதிருங்கள் என்றார் . அப்பொழுது : உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்".

**III நமக்குள்ளே வாசம்பண்ணுகிற ஆவியானவர் வைராக்கியமுள்ளவர்.**

யாக் 4:5 "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?"

**IV நாமும் வைராக்கியமாக இருக்க வேண்டும்.**

அ. கசப்பான வைராக்கியம் கூடாது!

யாக் 3:14 "உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள்".

ஆ. அறிவுக்கேற்ற வைராக்கியம் வேண்டும்.

ரோம 10:2-3 "தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சி சொல்லுகிறேன் ; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால், தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்".

இ. நல்ல விஷயத்தில் வைராக்கியம் வேண்டும்.

கலா 4:18 "நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்; அதை நான் உங்களிடத்தில் இருக்கும்பொழுதுமாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்ட வேண்டும்".

## V கர்த்தருக்காக வைராக்கியமாயிருக்க வேண்டும்.

எலியா, ராஜாவையும் இஸ்ரவேல் தேசத்தையும் எதிர்த்து நின்றான்.

1 ராஜா 19:10 "அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்".

1 ராஜா 18:21 "அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். ஜனங்கள் பிரதியுத்தரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை".

யெகூ பாகாலின் தீர்க்கத்தரிசிகளையும், பாகாலையும் ஆகாபின் வீட்டாரையும் சங்கரித்தான். (2 ராஜா 10:1-28)

## VI சபைக்காக வைராக்கியமாயிருக்க வேண்டும்.

சங் 69:9 "உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது".

2 கொரி 11:28-29 "இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?

## VII கர்த்தருடைய வசனத்திற்காக வைராக்கியமாயிருக்க வேண்டும்.

சங் 119:139 "என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால், என் பக்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது".

அப் 4:18-20 "அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்".

அப் 18:5 "மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயும் வந்தபோது, பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவை கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்".

**VIII நல்ல செயல்களுக்காக வைராக்கியமாயிருக்க வேண்டும்**

தீத்து 2:14 "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்".

எபே 2:10 "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்".

அப் 10:38 "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்".

**IX ஊழியக்காரனுக்காக வைராக்கியமாயிருக்க வேண்டும்**

2 கொரி 7:7 "அவன் வந்ததினாலேமாத்திரமல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப்பற்றி உங்களுக்கு உண்டான பக்திவைராக்கியத்தையும் அவன் கண்டு, உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப்படுத்தினதினாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்".

ரோம 16:3-4 "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன்வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாகளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான்மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கிறார்கள்"

# குடும்பத்தை அழகாக அலங்கரியுங்கள்

**I பேதுரு தனது நிருபத்தில் அலங்கரிப்பை பற்றி பேசுகிறார்** [1 பேதுரு 3:1-5]

அது உள்ளான அலங்கரிப்பு மற்றும் அது அழியாதது. மேலும் அது நம்முடைய குணங்கள் (அ) பண்புகளை குறிக்கின்றது. அலங்கரித்தலை அனைவருமே விரும்பக்கூடியவர்களாக இருக்கிறோம்.

சில வீடுகளுக்கோ, இடங்களுக்கோ செல்ல பிடிக்கும்; சில வீடுகளுக்கோ, இடங்களுக்கோ செல்ல விருப்பமே வராது. வீட்டைபற்றி அல்ல வீட்டில் உள்ளவர்களை பற்றி பேசுகிறார்.

குடும்பத்தில் ஒருவரோடொருவர் எல்லா செயல்களுடன் ஒத்துப்போக முடிவதில்லை. ஒருவரைப்பற்றி ஒருவர் உள்ளத்துக்குள் கசந்து உதட்டில் முறுமுறுத்துக்கொண்டுள்ளோம். அநேக நேரங்களில் நாம் செய்வது நமக்கே (பாராட்டத்தக்கதாக) விரும்பத்தக்கதாக இருப்பதில்லை; தேவன் நம்மை நாமே அலங்கரித்துக்கொள்வதை விரும்புகிறார்.

சங் 96:9 "பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்".

**II அன்பினால் (love) அலங்கரிக்க வேண்டும்**

தேவன் தன்னுடைய குடும்பத்தை அன்பினால் அலங்கரித்துள்ளார்.

யோவா 3:16 "தேவன், தம்முடைய ஒரே பேறானகுமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்".

எபே 5:25 "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து".

**III தியாகத்தினால் (Sacrifice) அலங்கரிக்க வேண்டும்**

எபே 5:2 "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

ரூத் 1:15-17 "அப்பொழுது அவள்: இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ

என்றாள். அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்".

## IV விட்டுக்கொடுத்தலினால் (Adjustment) அலங்கரிக்க வேண்டும்

பிலி 2:5-7 "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்,தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்".

ஆதி 13:8-9 "ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம் ; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்".

## V ஊக்கமூட்டுதலினால் (Encouragement) அலங்கரிக்க வேண்டும்

❖ இயேசு உற்சாகமூட்டுகிறார், ஆவியானவர் தேற்றுகிறார்.

யோவா 14:1,16 "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்".

1 சாமு 1:7-8 "அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்தில், அவன் வருஷந்தோறும் அந்தப்பிரகாரமாய்ச் செய்வான்; இவள் அவளை மனமடிவாக்குவாள்; அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள். அவள் புருஷனாகிய எல்க்கானா அவளைப் பார்த்து; அன்னாளே, ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? பத்துக் குமாரரைப்பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்றான்".

## VI நேர்மையினால் (Honesty) அலங்கரிக்க வேண்டும்.

❖ நேர்மை அல்லது உண்மையினால் அலங்கரிக்க வேண்டும். இயேசு தான் செய்யப்போகிற எல்லாவற்றையும் வெளிப்படையாக பேசினார்.

யோவா 15:15 "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை; ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்".

**VII ஒருமனத்தினால் அலங்கரிக்க வேண்டும்.**

அப் 5:9 "பேதுரு அவளை நோக்கி : நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள் : ஆம், இவ்வளவுக்குத்தான்".

**அனனியாவும், சப்பிராளும் தீமை செய்ய ஒருமனம் கொண்டார்கள் என்றால், நாம் நன்மை செய்ய ஒருமனம் கொள்வது எவ்வளவு சாத்தியமான ஒன்று. ஆக்கில்லா, பிரிஸ்கில்லா நன்மை செய்ய ஒருமனம் கொண்டனர்.**

ரோம 16:3-4 "கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள்".

**VIII தேவனை தொழுதுக்கொள்வதினால் அலங்கரிக்க வேண்டும்**

- **தேவனிடத்தில் குடும்பாக அனுதினம் ஜெபியுங்கள், அவரை துதியுங்கள். அவரை தொழுதுக்கொள்ளுங்கள், அவருக்கு ஊழியம் (பணிவிடை) செய்யுங்கள்.**

யோசு 24:15 "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்".

# தம்பதிகளிடம் கருத்து வேறுபாடு ஏற்படும்போது...

கணவர்களும் மனைவிகளும் ஒருவர் மீது ஒருவர் அன்புகூர்ந்திருப்பினும், சில வேளைகளில் கருத்து வேறுபடுகின்றனர்.

நீங்கள் கருத்தில் மாறுபாடுகள் கொண்டுள்ளபோது, எவரொருவரும் மனம் புண்படாதபடி நீங்கள் நடந்துக்கொள்ள வேண்டும். [எபே 4 : 25-32]

## I நேர்மையாக இருங்கள்

எபே 4:25 "அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்".

- ஒருவர் மற்றொருவரிடம் மதிப்பு, இரக்கம், மற்றும் அன்பு ஆகியவற்றில் திறந்த மனதுடன் இருங்கள். இன்றைய நாட்களில் உண்மை என்பது குறைவாகத்தான் உள்ளது.
- வலதுகரமானது இடதுகரத்திற்கு வஞ்சனை செய்ய முயற்சிப்பதில்லை. மாறாக, இடதுகரமானது இடர்பாட்டில் இருந்தால், வலதுகரம் உதவ முயற்சி செய்யும். உங்கள் மனதை யாரேனும் புண்படுத்தியிருந்தால் நீங்கள் நேர்மையுடன் இருக்க அவரிடம் சென்று அதைப்பற்றிப் பேசவேண்டும்.

மத் 18:15 "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்".

நீங்கள் யாரையேனும் புண்படுத்தியிருந்தால், அவருடன் அமர்ந்து பிரச்சனையை தீர்க்க வேண்டும்.

## II உங்களையே கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள்

எபே 4:26-27 "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாகஉங்கள் எரிச்சல் தணியக்கடவது ; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்".

- உங்கள் உணர்வெழுச்சிகளை கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள்; உங்கள் மொழிநடையானது மிகவும் கொடுமையானதாயிராமல் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கோபம் என்பது எப்போதும் பாவம் நிறைந்தாக இருப்பதில்லை. சில வேளைகளில் கோபம் ஏற்புடையதாக உள்ளது. தேவன்

கோபமாக இருப்பதாக வசனப்பகுதிகள் கூறுகின்றன (எண்25:4; உபா9:8). நீங்களும் நானும் பாவத்தை பற்றி கோபப்பட்டே ஆக வேண்டும். மக்களை உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் அழிக்கின்ற செயல்கள் பற்றிக் கோபப்பட்டே ஆக வேண்டும்.

ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் தவறான சூழ்நிலைகளில் கோபப்படுகிறவர்களாக காணப்படுகிறோம். முக்கியமற்ற விஷயங்களில் எரிச்சல் கொள்கிறோம். நாம் ஒருவர் மீது ஒருவர் கோபம்கொள்ளும்போது நாம் கூறுவதும் செய்வதும் பெரும்பாலும் பாவம் நிறைந்ததாக உள்ளது. கோபமான ஒரு கணவனோ கோபமான ஒரு மனைவியோ சாத்தானுக்கு சுலபமான இலக்காகின்றனர். கோபமானது உங்களின் ஆவிக்குரிய எதிர்ப்பு சக்தியை குறைக்கிறது.

## III சரியான வேளையில் செயல்படுங்கள்

எபே 4:26 "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது"

- கோபம் அல்லது வெறுப்பை தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டாம். உடனடியாக பிரச்சனைகளுக்கு தீர்வு காணுங்கள். கூறக்கூடாத விமர்சனங்களை கூறுவதைக் காட்டிலும் சற்று தூரம் நடந்து செல்லுதல் நல்லது. இதை மூன்று மாதம் வரையிலும் தள்ளிப்போடாதிருங்கள், அடுத்த நாள் வரையிலும் கூட தள்ளிப்போடாதிருங்கள். "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே தணிய எரிச்சல் வேண்டும்.
- ஒரு காரியத்தை நான்கு மாதங்கள் தணியாமல் தள்ளி வைத்திருந்தால் இன்று சூரியன் அஸ்தமிக்கும் வரை அதற்கு இடங்கொடாதீர்கள். ஒன்று கூடி ஜெபியுங்கள், பாராட்டும் விஷயங்களை பேசுங்கள். வெறுப்புணர்வு வளராதபடி பிரச்சனையை கையாளுங்கள்..

## IV நேர்மறையாக இருங்கள்

எபே 4:28 "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்".

- நீங்கள் பிரச்சனையை சுட்டிக்காண்பிப்பதற்கு முன்பாக, நேர்மறையான தீர்வுகள் சிலவற்றை அளிப்பதற்கு தயாராயிருங்கள். நாம் திறந்த மனதுடனும் நேர்மையுடனும் இருக்கும்போது, நாம் உண்மையில் நம்மைப்பற்றி மாத்திரம் நினைத்துக்கொண்டு இருப்போம். நாம் பிறரை பற்றி நினைக்க வேண்டும் என்பது 28ம் வசனத்தின் மாபெரும் கொள்கைகளில்

ஒன்றாக உள்ளது. மக்கள் திருடுவதற்கு பதிலாக திருந்துகின்றனர்; ஆனால் கொடுப்பதற்கு பதிலாக தங்களுக்கென்று வைத்துக்கொள்கின்றனர். எனது திருமண வாழ்வு மற்றும் குடும்பம் ஆகியவற்றை பாதிக்கும் விஷயங்கள் வரும்போது, நான் எதைப்பற்றி அதிக அக்கறை கொள்கிறேன், என் விருப்பமா? என் குடும்ப நலமா?

## V சாமர்த்தியம் உள்ளவர்களாய் இருங்கள்

எபே 4:29 "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள்".

- நீங்கள் கூறுவது என்ன? மற்றும், அதைப்பற்றி நீங்கள் எவ்வாறு கூறுகிறீர்கள்? இங்கு "கெட்ட" என்ற வார்த்தையின் கிரேக்க பதமானது "அழுகிப்போன" எனப்படும். நல்ல வார்த்தைகள் என்பது சந்தர்ப்பத்திற்கு ஏற்புடைய வார்த்தைகள்.

நீதி 15:1 "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்".

நமது வார்த்தைகள் நமது துணைகளை ஆசீர்வதிக்க வேண்டும். நாம் செய்யக்கூடாதவற்றை செய்யும் போது தேவனுடைய ஆவியை உடைந்துபோகப் பண்ணுகிறோம்.

எபே 4:30 "அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்".

இடித்து அழிக்கின்ற வார்த்தைகளை அல்ல, கட்டி எழுப்புகின்ற வார்த்தைகளை பேசுங்கள்.

## VI விஷயத்தை தனித்ததாக வைத்துக்கொள்ளுங்கள்

எபே 4:31 "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது".

- உங்கள் கருத்து வேறுபாட்டை தனித்ததாக வைத்துக்கொள்ளுங்கள் அதை உங்களுக்குள் மாத்திரமே வைத்து, குறைத்துக்கொள்ளுங்கள். அதை பெரிதுப்படுத்தி வெளியரங்கமாக்காதீர்கள்.
- நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க, "சகலவித கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம், துர்க்குணம்". இவைகளை புறம்பே எறிந்துவிட வேண்டும். உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் மாத்திரம் உங்கள் வேறுபாடுகளை கலந்துரையாடுங்கள்.

## VII அவற்றை சுத்தம் செய்யுங்கள்

எபே 4:32 "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்".

- கருத்து வேறுபாடு முடிகிறபோது, கிறிஸ்தவர் போன்று செயல்படுவதன் மூலம் குழப்பத்தை சுத்தம் செய்ய உதவுங்கள். ஒருவருக்கொருவர் தயவாய் இருங்கள். ஒவ்வொரு இருதயமும் உடையக்கூடியது, ஆகையால் ஜாக்கிரதையாய் கையாளுங்கள். மனஉருக்கமாய் - ஒருவர் மீது ஒருவர் பரிவிரக்கம் உள்ளவர்களாக இருங்கள்.

- உங்கள் வாழ்வையும், உங்கள் மனைவியின் வாழ்வையும், உங்கள் பிள்ளையின் வாழ்வையும் ஆசீர்வதிக்ககூடிய திருமண வாழ்வை தேவன் உங்களுக்கு தந்தருள்வாராக.

# சிலுவையும், கிறிஸ்தவனும்...

ரோம ஆட்சியின் காலத்திலே கொடுக்கப்பட்ட உச்சமான தண்டனை சிலுவையில் அறைதல். சிலுவையில் அநேகர் அறையப்பட்டனர். ஆனாலும் சிலுவை என்றவுடன் நமது நினைவுக்கு வருபவர் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. கிறிஸ்துவின் சிலுவை உலக சரித்திரத்தை இரண்டாக மாற்றியது. கிறிஸ்துவின் சிலுவை தன்னை நெருங்கி வருகிறவர்களின் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது. சிலுவை ஒரு கிறிஸ்தவனுக்கு தரும் அறைகூவல்கள் ஏராளம்; நிறைய காரியங்களை ஞாபகப்படுத்திகிறது.

**I *சிலுவை – நாம் நம்முடைய பழைய மனுஷனை சிலுவையில் அறைந்துவிட்டதை ஞாபகப்படுத்துகிறது.***

ரோம 6:6 "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறைப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்".

கலா 5:24 "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்".

கலா 6:14 "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல், வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்".

**II *சிலுவை – நாம் நமக்கென்று பிழைக்காமல் கர்த்தருக்கென்று பிழைத்திருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்துகிறது.***

கலா 2:20 "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில்லறைப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன் ; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்".

ரோம 6:4 "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்".

ரோம 14:7-8 "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்".

2 கொரி 5:15 "பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்".

## III சிலுவை—நமக்கு, தேவனுடைய பெலன் உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறது

1கொரி1:18 "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது".

ரோம 1: 16 "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது".

## IV சிலுவை—தேவனை விட்டு நம்மை பிரிக்கமுடியாது என்பதை ஞாபகப்படுத்துகிறது

எபே 2:16 "பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்".

- கிறிஸ்து நம்மை தேவனுடன் இணைத்திருக்கிறார். கிறிஸ்து இணைத்தை எவராலும் பிரிக்க முடியாது; தேவன் கைகளில் இருந்து நம்மை யாராலும் பறிக்கவும் முடியாது.

ரோம 8:35-39 "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாமலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்".

## V சிலுவை – நமக்கென்று சுமக்கும்படி சிலுவை உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறது

- கிறிஸ்து தன்னுடைய சிலுவையை சுமந்துக்கொண்டு சென்றார்.

யோவா 19:16-17 "அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அவர் தம்முடைய

சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என் சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்".

மத் 10:38 "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல".

## VI *சிலுவை – கிறிஸ்துவை நாம் வெட்கப்படுத்த முடியும் என்பதை ஞாபகப்படுத்துகிறது*

❖ **நாம் சாட்சிகளாக வாழாவிடில், நாம் கிறிஸ்துவை மிகவும் எளிதாக அவமானப்படுத்தி விடலாம்.**

எபி 6:4-6 ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்லவார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகியபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்".

எபி 12:2 "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்".

## VII *சிலுவை – எதிரிகள் உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறது*

❖ **கிறிஸ்துவை மறுக்கிறவர்கள், மறைக்கிறவர்கள், எதிர்க்கிறவர்கள் எல்லாரும் எதிரிகள் தான்.**

பிலி 3:17-19 "சகோதாரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி,நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் ; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்".

1 கொரி 1:23 "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் ; அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்".

1 கொரி 2:2 "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறைப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்".

# தீர்மானம்

தீர்மானிக்காமல் எந்த ஒரு செயலையும் செய்ய முடியாது. நாம் எடுக்கின்ற தீர்மானங்கள் நமது எதிர்காலத்தை அநேக வேளைகளில் நிர்ணயிக்கின்றன. ஒவ்வொரு தீர்மானத்திற்கு முன்பும் நாம் கேட்க வேண்டிய கேள்விகள் கேட்டு, தேவனுக்கு சித்தமானபடி சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். வேத வசனத்திற்கென்று சில குறிப்பிட்ட கொள்கைகள் உண்டு.

## I நான் எடுத்த முடிவு வேதாகம கொள்கைக்கு முரணானதா?

உதாரணத்திற்கு ஒருவர் வேலை செய்ய மாட்டேன் என்று முடிவு எடுக்கிறார்; அப்படிப்பட்டவர்களைக் குறித்து வேதாகமம் கூறுவது,

2 தெச 3:10-12 "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்".

ஆதி 3:9 "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்".

## II நான் செய்வது எனது சாரீத்தை தூய்மைபடுத்துமா? கறைப்படுத்துமா?

1 கொரி 6:19 - 20 "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியனாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்".

1 கொரி 3:16 - 17 "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்".

## III நான் செய்வது என் கிறிஸ்தவ செல்வாக்கை பாதிக்குமா? குறைக்குமா? கூட்டுமா?

1 தீமோ 4:12 "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதியாயிரு".

மத் 5:13-15 "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் ; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும் மனுஷனால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது".

**IV நான் செய்வது என்னுடைய உடன் கிறிஸ்தவர்களை பெலப்படுத்துமா? பெலவீனப்படுத்துமா?**

1 கொரி 8:13 "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்".

ரோம 14:19 "ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்".

**V நான் செய்வது மற்றவர்களுடைய உடலையோ, நன்மதிப்பையோ பாதிக்குமா ?**

ரோம 13:10 "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது".

**VI என்னுடைய நோக்கம் தூய்மையானதா ?**

கலா 5:26 "வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம்".

மத் 6:1-2 "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

**VII நான் இப்பொழுது செய்யப்போகின்ற காரியத்தை குறித்து நாளைக்கோ, சில மாதம் கழித்தோ, சில வருடம் கழித்தோ சிந்தித்தால், அது எப்படிபட்டதாக இருக்கும்? அது நல்ல பெயரையா, கெட்ட பெயரையா, எதை உண்டாக்கும் ?**

நீதி 10:7 "நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்; துன்மார்க்கனுடைய பேரோ அழிந்துபோகும்".

**VIII இதை இயேசு கிறிஸ்து செய்வாரா?**

பிலி 2:5 "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது".

1 பேதுரு 2:21 "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி, உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்".

# ஆசைகள்

- ஆசையில்லாத மனிதனே இருக்க முடியாது! நிச்சயமாகவே எல்லாருக்குள்ளும் ஏதேனும் ஒரு ஆசை இருக்கத்தான் செய்யும். ஒவ்வொருவருக்கும் ஆசைகள் வித்தியாசப்படும். வேதாகமம் சிலருடைய ஆசைகளை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொருவருக்கும் ஆசைகள் வித்தியாசப்படும். அவற்றில் தேவனுக்கு உகந்த ஆசைகளை நாம் அறிந்து, அதனை செயல்படுத்துவோம்.

**I சேபாவின் ராஜஸ்திரீக்கு சாலோமோனின் பொக்கிஷங்களின் மீது ஆசை**

2 நாளா 9:12 "சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவுக்குக் கொண்டுவந்தவைகளைப் பார்க்கிலும் அதிகமாய் அவள் ஆசைப்பட்டுக்கேட்ட எல்லாவற்றையும் ராஜாவாகிய சாலோமோன் அவளுக்குக் கொடுத்தான்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடுங்கூட தன் தேசித்திற்குத் திரும்பிப்போனாள்".

**II இளைய மகனுக்கு தவிட்டின் மீது ஆசை**

லூக் 15:16 "அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குப் கொடுக்கவில்லை".

**III லாசருக்கு துணிக்கைகளின் மீது ஆசை**

லூக் 16:21 "அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று".

**IV இயேசுவுக்கு பஸ்காவை ஆசரிக்க ஆசை**

லூக் 22:15 "அப்பொழுது அவர் அவர்களை நோக்கி : நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்".

**V ஆபிரகாமுக்கு கிறிஸ்துவின் நாளைப் பார்க்க ஆசை**

யோவா 8 : 56 "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்".

**VI செர்கியுபவுலிற்கு தேவ வசனத்தை கேட்க ஆசை**

அப் 13:7 "அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல் என்னும் அதிபதியுடனே கூட

இருந்தான். அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான்".

## VII பவுலிற்கு கிறிஸ்துவுடனிருக்க ஆசை

பிலி 1:23 "ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்".

## VIII பவுலிற்கு இலக்கை நோக்கி தொடர ஆசை

பிலி 3:12 "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்".

## IX தேமாவிற்கு இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை

2 தீமோ4:10 "ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்".

## X சிலருக்கு பணத்தின் மீது ஆசை

1 தீமோ6:10 "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்".

## XI தியோத்திரேப்பிற்கு முதன்மையாயிருக்க ஆசை

3 யோவா 9:10 "நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை"

- உங்களுக்கு உள்ள ஆசை எப்படிப்பட்டதாயிருக்கிறது? அது ஆவிக்குரியதா, பூமிக்குரியதா, நித்தியத்திற்குரியதா, அநித்தியமானதா, தேவனுக்கு உகந்ததா, எதிரானதா? பிறருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை பெலப்படுத்துமா?

- **எல்லாருக்கும் தேவையான தேவனுக்கு உகந்த ஆசை**

1 தீமோ 2:4 "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்".

தேவனின் ஆசையை நிறைவேற்ற உறுதி எடுப்போம்!

# தாழ்மையை அழிப்பவை...

❖ தேவன் தாழ்மையாக இருக்கும்படியாக நம்மை அழைக்கிறார்;

❖ தாழ்மையின் முழு உருவம், இயேசுகிறிஸ்து!

**I பவுல் இதை விளக்குகிறார்**

பிலி 2:5-8 "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது ; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்".

**II இயேசுவே இதை பேசியுள்ளார் (சாந்தம், மனத்தாழ்மை)**

மத் 11:29 "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்".

**III தேவன் எதிர்ப்பார்க்கிறார்**

மீகா 6:8 "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைச் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்".

**IV புதிய ஏற்பாடு இதற்காக நம்மை அழைத்திருக்கின்றது**

பிலி 2:3 "ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்".

**V வாழ்வின் உயர்வுக்கு எளிய வழி, கடவுளுக்கு முன் தாழ்மைப்படுதல்**

யாக் 4:10 "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

நாம் தாழ்மையாய் இருந்தால், கடவுளின் வாக்குத்தத்தங்கள் தானாக நாம் வாழ்வில் நிறைவேறும்.

**VI தேவனின் சுபாவமே பெருமையை எதிர்ப்பது**

1 பேதுரு 5:5 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்;

பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்".

**VII ஒருவர் கிறிஸ்தவராக மாறியவுடன் வெளிப்படுத்த அல்லது கடைபிடிக்க வேண்டிய குணம் தாழ்மை**

கொலோ 3:12 "ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு".

தாழ்மை என்னும் குணத்திற்கு எதிர்குணம் பெருமை. இது ஒரு கொள்ளை (மரண) நோய். கீழே குறிப்பிடபட்டுள்ள குணங்கள், தாழ்மைக்கு எதிரானவை.

❖ **சுயநீதியின் எண்ணம்**

அ. இயேசு பரிசேயர்களின் சுயநீதியை பகிரங்கமாக கடிந்துக்கொண்டார்

ஆ. இந்த குணம் பாவத்தை பற்றிய முரட்டாட்டத்தை உண்டாக்கும்

1 கொரி 1:29-30 "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" "அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக".

❖ **சுய நிறைவு**

அ. சுயநிறைவு எண்ணம் உள்ளவர்கள் எல்லாம் தன்னாலும், தன் திறமையாலும் வளர்வதாகவும், வாழ்வதாகவும் நினைக்கின்றனர்.

ஆ. எல்லாமே தேவனால் நடப்பது, கிடைப்பது என்று நினைத்து நன்றி கூறாதவர் எல்லாருமே, சுயநிறைவு உள்ளவர்கள்.

இ. லூக் 12-ல் நன்றாய் விளைந்த போது இருந்த எண்ணம்

❖ **சுயதிருப்தி**

தாழ்மைக்கு பெயர்பெற்றவர் அப். பவுல்

அ. பாவிகளின் பிரதான பாவி என்கிறார்

ஆ. அப்போஸ்தலர்களின் கடைசியானவர் என்கிறார்.

இ. எப்பொழுதுமே தேவனையும், கிறிஸ்துவையும், வேதத்தையும் அதிகம் அறிய, அதனை பற்றி சொல்ல, அதில் அதிகம் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் தேவை.

மத் 18:3 "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

# சபை என்ற ராஜ்ஜியத்தின் மதிப்பு உங்களுக்கு தெரியுமா?

மத் 16:18-19 "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்".

கொலோ 1:13 "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்".

**I *சபையும், இராஜியமும் இணைந்ததே!***

உண்மையான வேதாகம பிரசங்கி, ராஜ்ஜியம் பற்றி பேசாமல் செய்தியை முடிக்க மாட்டார்.

அ. திருமுழுக்கினர்

மத் 3:2 "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்".

ஆ. இயேசு

மத் 4:17,23 "அதுமுதல் இயேசு : மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்".

"பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்".

மத் 6:10 "உம்முடைய ராஜ்யம் வருவதாக ; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக".

அப் 1:3 "அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்".

இ. பிலிப்பு

அப் 8:5, 12 "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய்

அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான். தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்".

ஈ பவுல்

அப் 28 : 30-31 "பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு. மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்".

**II இராஜ்ஜியம் பற்றி இயேசு கொண்டிருந்த மதிப்பு எவ்வளவு என சிந்திப்போம்!**

அ. 1. தன் வாழ்வையே கொடுத்தார், ரத்தத்தை சிந்தினார்.

அப் 20:28 "ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்".

2. சரிரத்தின் மீட்பர்.

எபே5:23 "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகாயிருக்கிறார்".

ஆ. அப்படியானால் நாம் தேடவேண்டியது...

மத் 6:33 "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்".

இ. தேவனுடைய ராஜ்ஜியத்துக்கு அதிக விலை மதிப்பு உண்டு என்று இயேசு சொன்னார் ஆகையால், எதை வேண்டுமானாலும் உலகில் இழந்துவிட்டு, மிக மிக விலை உயர்ந்த தேவ ராஜ்ஜியத்தை பெறலாம்.

1. மிக விலை உயர்ந்த முத்து.

மத் 13:44-46 "அன்றியும் பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்", மேலும் பரலோகராஜ்யம் நல்ல முதத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறோன்".

2. சுத்தம் பண்ணி, கழுவுகிறது

எபே 5:26 "தாம் அதைக் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்".

ஈ. சபையை இயேசு போஷிக்கிறார்.

உ. சபை இயேசுவின் மணவாட்டி. [எபே 5:23 - 31]

ஊ. இந்த இராஜ்ஜியத்துக்காகவே திரும்பி வரபோகிறார்

1 கொரி 15:24 "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்ஜியத்தை ஒப்புக்கொடுப்பார்".

## III சீடர்கள் கொண்டிருந்த மதிப்பு

அ. பூமியெங்கும் சொல்லப்படும்

அப் 1:8 "... எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சியாயிருப்பீர்கள் என்றார்".

ஆ. இரட்சிக்கப்பட்டவர்களை சபையாகிய அரசிலே கர்த்தர் சேர்த்தார்

அப்2:47 "தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்".

இ. பிலிப்பு போதித்தான், மக்கள் இராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டார்கள்

அப் 8:5,12 "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்".

"தேவனுடைய ராஜ்ஜியத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்."

ஈ பவுல் சிறையிலிருந்து இராஜ்ஜியம் பற்றி பேசினார். [அப் 24:23]

1. சபையே தேவ ஞானத்தை வெளிபடுத்தும்

எபே 3:10-11 "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக. இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள்

முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது".

2. சபை தூணும், ஆதாரமும் என்றார்.

3. நாம் சுவிசேஷ ஊழியம் செய்யாமால் இருந்தாலே, சபையை அழித்து விடலாம்!

1 கொரி 10:31-32 "ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி அவர்கள் இரட்சிக்கப்படும் படிக்கு எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல.

4. சபையை அழிப்பவன் தன்னை தானே அழிக்கிறான்.

1 கொரி 3:16,17 "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்".

5. சபையில் இருப்பவர்கள் ஜீவ புஸ்தக பட்டியலில் இருப்பார்கள்.

**IV இதற்குள் பிரவேசிக்க சட்டதிட்டம் இருக்கின்றது.**

இதிலிருந்தே ராஜ்ஜியம் எவ்வளவு விலை உயர்ந்தது என்பதை அறியலாம்.

அ) வேதபாரகர் பரிசேயர்களைவிட மேம்பட்டவர்கள் மட்டுமே உள்ளே வர முடியும்.

மத் 5:20 "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்".

ஆ) குழந்தையை போல மாற வேண்டும்.

மத் 18:3-4 "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்".

இ) உலக பொருட்களை தியாகம் செய்ய வேண்டும்.

மத் 19:21-24 மற்றும் லூக் 9:62 "அதற்கு இயேசு : கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்".

ஈ. மாறுதல் தேவை.

யோவா 3:3-5 "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்".

தீத்து 3:5 "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்".

**V *சபையின் அழியாத்தன்மை, அதன் விலை மதிப்பை அடையாளப்படுத்துகிறது***

அ. அழியாது என தீர்க்கதரிசனமாகவே சொல்லப்பட்டது.

தானி 2:44 "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்ஜியத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி நிர்மூலமாக்கி தானோ என்றென்றக்கும் நிற்கும்".

ஆ. காபிரியேல் தூதன் கூறுகையில்,

லூக் 1:33 "அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்".

இ. பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளாது.

மத் 16:18 "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை".

ஈ. இதன் அஸ்திபாரத்தை யாராலும் அசைக்கமுடியாது.

எபி 12:28 "ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம், பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்".

# பொறாமை

பொறமை ஒரு பயங்கரமான, தீமையான குணம். அதனை விட அதினுடைய விளைவுகளும் தன்மைகளும் கொடியது.

## I பொறாமையின் தன்மைகள்

அ. பொறமை, சகோதரர்க்குள்ளே விரோதத்தை உண்டாக்கும் தன்மையுடையது.

ஆதி 37:5,11 "யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்".

ஆ. பொறாமை அழித்துபோடும் இயல்புடையது.

யோபு 5:2 "கோபம் நிர்மூடனைக் கொல்லும்; பொறாமை புத்தியில்லாதவனை அதம் பண்ணும்".

இ. பொறாமை புற்றுநோய் போல கொடியது.

நீதி 14:30 "சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ எலும்புருக்கி".

ஈ. கிறிஸ்துவை சிலுவையில் பலியாக்கியது பொறாமையே!

மத்27:17 "பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து".

## II பொறாமையை பற்றிய உண்மைகள்

அ. அது வெற்றி பெறாது.

நீதி 27:4 "உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது; பொறாமையோவென்றால் அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்?"

ஆ. அதினால் தேவபிள்ளைகள் துன்பப்படுத்தப்படுவார்கள்.

அப் 5:17-18 "அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து. அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள்".

அப் 13:45 "யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள்".

இ. அதற்கு எவரும் விதிவிலக்கல்ல.

பிர 4:4 "மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும் பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு எதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும் மனத்துக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது".

ஈ. அது கிறிஸ்துவிற்குள் நாம் வளர்ச்சயடையவில்லை என்பதை காண்பிக்கிறது.

1 கொரி 3:3 "பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷசமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?".

உ. பொறாமை அன்புக்கு எதிரானது.

1 கொரி 13:4 "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது".

ஊ. அது தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க விடாது.

கலா 5:21 "பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்".

**III பொறாமைபடாதீர்கள்! (யார் மேல்?)**

அ. நியாயக்கேடு செய்கிறவர்கள்.

சங் 37:1 "பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே".

ஆ. வீம்புக்காரர்கள்.

சங் 73:3 "துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமை கொண்டேன்".

இ. கொடுமையுள்ளவர்கள்.

நீதி 3:31 "கொடுமையுள்ளவன்மேல் பொறாமை கொள்ளாதே; அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்துகொள்ளாதே".

ஈ. பாவிகள்.

நீதி 23:17 "உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே; நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு".

உ. பொல்லாதவர்கள்.

நீதி 24:1 "பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே; அவர்களாடே இருக்கவும் விரும்பாதே".

ஊ. துன்மார்க்கர்கள்.

நீதி 24:19 "பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலாகாதே: துன்மார்க்கர்மேல் பொறாமை கொள்ளாதே".

எ. தேவபிள்ளைகள்.

சங் 106:16 "பாளயத்தில் அவர்கள் மோசேயின் மேலும், கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோனின்மேலும் பொறாமை கொண்டார்கள்".

**IV தேவப்பிள்ளைகளும் பொறாமையும்...**

அ. பொறாமையோடு நடக்க கூடாது.

ரோமர் 13:13 "களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச்சீராய் நடக்கக்கடவோம்".

ஆ. பொறாமை படக்கூடாது!

கலா 5:26 "வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம்".

இ. பொறாமையை விட்டுவிட வேண்டும்.

கொலோ 3:8 "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாதாக தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்"

ஈ. வசனத்தில் வளர வேண்டும்.

1 பேதுரு 2:2-3 "சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு. நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்.

# என்னைப் பின்பற்றி வா...

❖ இயேசு: "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றிவா என்றார்".

**அறிமுகம்:**

❖ ***தம் அடிச்சுவடுகளை பின்பற்றி வர, மாதிரியை பின்வைத்துப் போனார்***

1 பேதுரு 2:21 "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்".

**I சோம்பேறியாக நிற்கவே கூடாது!**

அ. கர்த்தரை பின்பற்றுகிறவர்கள், படிகளில் முன்னேற வேண்டும். (முன் செல்ல வேண்டும்)

ஆ. தலைவன் சென்ற வழியிலே தானும் நடக்க வேண்டும்.

இ. கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள், பழையவைகளை விட்டுவிட வேண்டும். பேதுரு தன் படகையும், வலைகளையும் விட்டுவிட்டு அவருக்கு பின் சென்றான்.

2 கொரி 5:17 "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின".

பிலி 3:13 "சகோதரரே! அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி".

**II இன்னொரு *தலைவனின்* (நோக்கி) பக்கம் *தன்னை திருப்பக்கூடாது!***

அ) பெரிய சொத்து அல்லது பதவியினால் தடை ஏற்படாது காத்துக்கொள்ள வேண்டும்.

மாற் 10:21-22 "இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா என்றார். அவன் மிகுந்த

ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்".

ஆ. உலக கவலை அல்லது வேலைகளால் தடை ஏற்படாது காத்துக் கொள்ள வேண்டும்.

லூக் 9:59-60 "வேறொருவனை அவர் நோக்கி : என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். அதற்கு இயேசு : மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் ; நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்".

இ. உலக அன்பால் தடை ஏற்படாது காத்துக் கொள்ள வேண்டும்.

லூக் 9:61-62 "பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே உம்மைப் பின்பற்றுவேன்; ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்".

III பின் *தங்கிவிடக்கூடாது !*

அ. சோதனைகளினால் பின்வாங்கும் அபாயம் உள்ளது. தனிப்பட்ட சோதனைகளினால் பேதுரு, பின்பற்றுவதிலிருந்து விலகி நின்றான்.

லூக் 22:54 "அவர்கள் அவரைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டு போய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின்சென்றான்".

ஆ. அவர் அருகில் இருப்பது பாதுகாப்பு.

யோவா 10:27, 28 "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது ; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை".

# இயேசுவின் இரத்தத்தினால் கிடைப்பவை...

## I மீட்பு

கொலோ 1:14 "(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது".

## II நீதிமானாக்கப்படுதல்

ரோம 5:9 "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே".

## III மன்னிப்பு (பாவ)

எபே 1:7 "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது".

## IV பரிசுத்தமாக்கப்படுதல்

எபி 13:12 "அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும் படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்".

## V சமாதானம்

கொலோ 1:20 "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று".

## VI கிட்டி சேர்தல்

எபி 10:19 "ஆகையால் சகோதரரே நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்".

## VII வெற்றி

வெளி 12:11 "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும்பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்".

# இயேசுவினுடைய வாழ்வில் ஆவியானவர்

❖ இயேசுவின் இப்பூமிக்குரிய வாழ்வில் ஆவியானர் அதிகமாக இடைப்பட்டார் அல்லது உறவாடினார்.

❖ இயேசுவின் இந்த பூமிக்குரிய வாழ்விலே ஆவியானவரின் பங்கு பெரிதாகும்.

**I இயேசுவின் பிறப்பிலே...**

❖ இயேசு பரிசுத்த ஆவியினாலே மரியாளின் வயிற்றிலே (உற்பவித்து) பிறந்தார்.

மத் 1:18 "இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது : அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது".

லூக் 1:35 "தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்".

**II இயேசுவின் வளர்ச்சியிலே...**

❖ இயேசு பரிசுத்த ஆவியிலே வளர்ந்து பெலன்கொண்டார். இயேசுவினுடைய சரீர பிறப்பிற்கும் மட்டுமல்ல, வளர்ச்சிக்கும் ஆவியானவர் உதவியாயிருந்தார் (காரணமாயிருந்தார்).

லூக் 2:40 "பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது".

**III இயேசுவின் அபிஷேகத்திலே...**

❖ தேவன் இயேசுவை பரிசுத்த ஆவியினாலே அபிஷேகித்தார்.

அப் 10:38 "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்".

லூக் 3:21-22 "ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு

புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது ''.

**IV. இயேசுவின் ஊழியத்திலே...**

❖ பரிசுத்த ஆவியானவராலே இயேசு ஊழியத்திற்கு அனுப்பபட்டார்.

லூக் 4:14-15 "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று. அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார்".

ஏசா 61:1-3 "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்".

யோவ 3:34 "தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்".

**V இயேசுவின் அற்புதங்களிலே...**

மத் 12:28 "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே".

லூக் 10:21 "அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து : பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது".

1 கொரி 2:11 "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்".

**VI இயேசுவின் பலியிலே...**

எபி 9:12-14 "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்டகடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்துதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்"!

**VII இயேசுவின் உயிர்த்தெழுதலிலே...**

ரோம 1:4-5 "இயேசுகிறிஸ்துவைக்குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர்; மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்".

**VIII இயேசுவின் கட்டளையிலே...**

அப் 1:1 "தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு".

மத் 28:20 "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்".

1 பேதுரு 1:12 "தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு, இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்".

# பரிசுத்தம்

**I தேவத்துவத்தில் பரிசுத்தம்.**

அ. தேவன் பரிசுத்தமானவர்.

சங் 22:3 "இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்".

ஆ. இயேசு கிறிஸ்து பரிசுத்தமுள்ளவர்.

அப் 3:14 "பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலைபண்ணவேண்டுமென்று கேட்டு".

இ. ஆவியானவர் பரிசுத்தமுள்ளவர் (பெயரிலேயே பரிசுத்த ஆவியானவர்).

அப் 20:28 "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்''.

ஈ. நாம் அவருடைய பிள்ளைகள் மற்றும் நாம் அவருடைய சாயலானவர்கள். ஆகையால், தேவன் நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறார்.

1பேதுரு1:16 "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே".

**II ஏன் நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும்?**

அ. தேவன் பரிசுத்தத்தை சிநேகிக்கிறார்.

மல் 2:11 "யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசத்தக்குலைச்சலாக்கி, அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்".

ஆ. ஊழியஞ் செய்யும்படியாக பரிசுத்தம் தேவை.

லூக் 1:71 "உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ் செய்யக்கட்டளையிடுவேன் என்று ".

இ. பரிசுத்தமாயிருக்க வேண்டியது தேவ சித்தம்.

1 தெச 4:3 "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது; அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து"

ஈ. நாம் பரிசுத்தமாக மாற, கிறிஸ்து பலியானார்.

எபே 5:26-27 "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும். கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்".

உ. பரிசுத்தத்திற்கே தேவன் நம்மை அழைத்தார்.

1 தெச 4 : 7 "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்".

நாம் அழைக்கப்பட்டது, பிரித்தெடுக்கப்பட்டது, முன்குறிக்கப்பட்டது எல்லாம், அவரை போல இருக்கும்படியாகத்தான்.

ஊ. தேவனைத் தொழுதுகொள்ள பரிசுத்தம் தேவை.

சங் 29:2 "கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்".

சங் 96:9 "பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்".

ஆகையினால் தான் இஸ்ரவேலர்கள் ஓய்வுநாளுக்கு முந்தைய நாளை ஆயத்தநாளாக அநுசரித்தார்கள். தேவனை ஆராதிக்க தங்களை ஆயத்தப் (பரிசுத்த) படுத்தினார்கள்.

எ. கர்த்தரை தரிசிக்க பரிசுத்தம் அவசியம்.

எபி 12:14 "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள் ; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே ".

மத் 5:8 "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்".

தேவன் பரலோகத்திலிருக்கிறார். பரலோகம் செல்ல பரிசுத்த வாழ்க்கை அவசியம்.

**III எப்படி நம்மை தேவன் பரிசுத்தப்படுத்துகிறார்?**

அ. ஞானஸ்நானத்தின் மூலம்

எபே 5:26-27 "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்".

அப் 22:16 "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்".

ஆ. கர்த்தருடைய பந்தியினாலே

1 யோ 1:7-9 'அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் ; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்".

இ. வசனத்தினாலே

யோவா 17:17 "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்".

**IV *எவைகளையெல்லாம் நாம் பரிசுத்தமாக காக்க வேண்டும்?***

அ. சரீரத்தை

ரோம 12:1 "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை ".

1 தெச 4:5 "உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து".

ஆ. நடக்கைகளை

1 பேதுரு 1:14-16 "நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். என்று எழுதியிருக்கிறதே".

இ. வார்த்தையை

மத் 12:36-37 "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்".

ஈ. சிந்தையை

மத் 5:27-28 "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று ".

1 பேதுரு 1:13 "ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்"

உ. முழுவதும் (ஆவி, ஆத்துமா, சரீரம்)

1 தெச 5:23 "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக".

# கடவுளை நம்புபவர்கள், நாள் பார்க்கலாமா?

**I தேவன் மீது நம்பிக்கை உள்ளவர்கள் செய்யத்தகாத ஒன்று இது!**

அ. தேவன் முற்றிலும் அருவருக்கின்ற ஒன்று இது.

ஜாதகம் (Horoscope), ஜோதிடம் (Astrology), சகுணம் (Augury), கைரேகை பார்த்தல் (Palmistry) மற்றும் குறிசொல்லுதல் (Divination) ஆகியவைகளை செய்வது பாவமாகும்!

ஆ. கேளாதே! பாராதே!

லேவி 19:26 "யாதொன்றையும் இரத்தத்துடன் புசிக்கவேண்டாம். குறிகேளாமலும், நாள்பாராமலும் இருப்பீர்களாக".

தீட்டு! தீட்டு!

லேவி 19:31 "அஞ்சனம்பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்க; அவர்களாலே தீட்டுப்பட வேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்"

இ. அது அருவருப்பு உபா 18:9 -12.

**II தேவன் அனுமதிக்கவில்லை**

உபா 18:13-14 "உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய். நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள் பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் செவிகொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார்".

அ. தேவனை நம்புகிறவர்களின் நடுவே இவை இருக்ககூடாது!

எசே 12 : 24 "இஸ்ரவேல் வம்சத்தாரின் நடுவில் இனிச் சகல கள்ளத்தரிசனமும் முகஸ்துதியான குறிசொல்லுதலும் இராமற்போகும்".

ஆ. இவற்றை பார்க்கிறவர்களை தேவன் கைவிடுவார்

ஏசா 2:6 "யாக்கோபின் வம்சத்தாராகிய உம்முடைய ஜனத்தைக் கைநெகிழ்ந்தீர்; அவர்கள் கீழ்த்திசையாரின் போதகத்தால் நிறைந்து பெலிஸ்தரைப்போல் நாள்பார்க்கிறவர்களாயிருந்து, அந்நிய புத்திரர்மேல் பிரியப்படுகிறார்களே".

இ. இவைகளை பார்க்கிறவர்கள், கொல்லப்பட வேண்டும்.

லேவி 20:27 "அஞ்சனம்பார்க்கிறவர்களும் குறிசொல்லுகிறவர்களுமாயிருக்கிற புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கொலைசெய்யப்பட வேண்டும்; அவர்கள்மேல் கல்லெறிவார்களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருக்கக்கடவது என்றுசொல் என்றார்".

லேவி 20:6 "அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நாடுகிறானோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக எதிர்த்துநின்று, அவனைத் தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகப்பண்ணுவேன்".

ஈ. புதிய ஏற்பாடு கடிந்துகொள்கிறது.

அப் 16:16-18 "நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின் தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப்புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று".

உ. புதிய ஏற்பாடு நம்மை, கறைப்படுத்திக்கொள்ளாத வாழ்வு வாழ அழைக்கிறது.

கொலோ 2:16 "ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக".

ஊ. இவைகளை பார்த்தால், உன் ஜீவியம் வீண், நீ பரலோகத்தை இழந்து விடுவாய்!

கலா 4:8-11 "நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள். இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே! நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்".

## III சில விளைவுகள்

அ) சவுல் தனது ராஜ்ஜிய பாரத்தை இழந்தான், தேவனை தனக்கு சத்துருவாக்கிக் கொண்டான்.

1 சாமு 28:7,16,17 "அப்பொழுது சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி : அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீயைக் தேடுங்கள்: நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன் என்றான்; அதற்கு அவனுடைய ஊழியக்காரர்: இதோ, எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீ இருக்கிறாள் என்றார்கள். அதற்குச் சாமுவேல்: கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்? கர்த்தர் என்னைக்கொண்டு சொன்னபடியே செய்து முடித்து, ராஜ்ஜியத்தை உன் கையிலிருந்து பறித்து, அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்துவிட்டார்".

ஆ. மனாசே ராஜா தேவனுடைய கோபத்தையும், தன் சந்ததிக்கு அழிவையும் சம்பாதித்துக்கொண்டான்.

2 ராஜா21:6,13 "தன் குமாரனைத்தீமிதிக்கப்பண்ணி, நாள்பாக்கிறவனும் நிமித்தம் பார்க்கிறவனுமாயிருந்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான்".

"எருசலேமின்மேல் சமாரியாவின் மட்டநூலையும், ஆகாப் வீட்டின் தூக்கு நூலையும் பிடிப்பேன்; ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்து வைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன்".

இ. அகசியா ராஜா மரித்துப்போனான்.

2 ராஜா 1:3-4,17 "கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான்; அப்படியே எலியா போய்ச் சொன்னான்".

"எலியா சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே அவன் இறந்து போனான்; அவனுக்குக் குமாரன் இல்லாதபடியினால், அவன் ஸ்தானத்திலே யூதாவின் ராஜாவாகிய யோசபாத்துடைய குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்தில் யோராம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்".

# சிறிய பொருள், பெரிய காரியம்!

சர்வ வல்லமையுள்ள தேவன் சிறிய பொருட்களை கொண்டு, பெரிய காரியங்களை (அற்புதங்களை) செய்தார்.

**I** **மோசேயின் கோல்** - எகிப்திலே வாதைகளை வருவித்தது, செங்கடலை இரண்டாக பிளந்தது.

(யாத் 4:2-5, 11, 20; 7:9-20; 8:5,16,17; 9:23; 10:13; 14:16-21)

**II** **ஆரோனின் கோல்** - தளிர்த்து, வாதுமை பழங்களை தந்தது.

எண் 17:8 "மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது, இதோ லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது".

❖ அது தேவனுடைய உடன்படிக்கை பெட்டியிலே பாதுகாக்கப்பட்டது.

எபி 9:4 "அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்ந்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன".

**III** **ராகாப் சிவப்பு நூல்** - அவளுடைய குடும்பத்தை அழிவிலிருந்து காப்பாற்றியது.

யோசு 2:17 "அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி: இதோ, நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, நீ இந்தச் சிவப்பு நூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி, உன் தகப்பனையும் உன் தாயையும் உன் சகோதரர்களையும் உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக்கொள்".

யோசு 6:17,25 "ஆனாலும் இந்தப் பட்டணமும் இதிலுள்ள யாவும் கர்த்தருக்குச் சாபத்தீடாயிருக்கும்; நாம் அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்துவைத்தபடியால், அவளும் அவளோடே வீட்டுக்குள் இருக்கிற அனைவருமாத்திரம் உயிரோடிருக்கக்கடவர்கள். "எரிகோவை வேவுபார்க்க யோசுவா அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்துவைத்தபடியினால், அவளையும் அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவையும் யோசுவா உயிரோடே வைத்தான்; அவள் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிறாள்".

**IV** ***எலியாவின் சால்வை*** - யோர்தான் நதி இரண்டாக பிரித்தது.

2 ராஜா 2:7 "தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஐம்பதுபேர் போய், தூரத்திலே பார்த்துக்கொண்டு நின்றார்கள்; அவர்கள் இருவரும் யோர்தான் கரையிலே நின்றார்கள்".

**V** ***தாவீதின் கூழாங்கல்*** - கோலியாத்தை வீழ்த்தி, இஸ்ரவேலின் நிந்தையை நீக்கியது.

1 சாமு 17:40,49 "தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பையிலே போட்டு, தன் கவணைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனண்டையிலே போனான்".

**VI** ***சிறுவனின் 5 அப்பம், 2 மீன்***-5000 ஆண்கள், மற்ற அநேகர் சாப்பிட உதவியது.

யோவா 6:9-13. ஆண்டவருக்காக திட்டங்களை பெரிதாக தீட்டுவோம். அந்த திட்டத்திற்காக நாமே சிறிதான ஒன்றை செயல்படுத்துவோம். பெரிதாக செய்ய நினைத்து அநேகர், சிறிதாக கூட ஆண்டருக்கு செய்ய தவறிவிடுகின்றர். நம்மிடம் உள்ளது சிறியதாக இருந்தாலும், அதை ஆண்டவரிடம் கொடுப்போம்; அவர் பெரியவர்! அவர் எல்லாவற்றையும் பெரிதாக செய்வார். எரிகோ சுவர் வேண்டுமானால் பெரிதாக இருக்கலாம், நீ ஆண்டவருடைய வாக்கின்படி அதை சுற்றி வா. எரிகோ இடிந்து விழுவதற்கும் நீ சுற்றி வருவதற்கும் சம்மந்தமே இல்லாதிருக்கலாம், அது உனக்கு புரியாததாக அல்லது விளங்கிக்கொள்ள முடியாததாக இருக்கலாம், ஆனால் ஆண்டவர் உன்னை சுற்றி வர சொல்கிறார். நீ சுற்ற வா அவ்வளவு தான்! நீயாக கற்பனை செய்து எரிகோ இடிபட கடப்பாரை, J.C.B. யை தேடாதே!

❖ அற்பமான இந்த ஆரம்பத்தை அசட்டை செய்யாதே!

சகரியா 4:10 "அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?"

**VII** ***சிறிய கடுகு விதை*** - பெரிய மரமாகும், பறவைகள் வந்து தங்கும்.

மத் 13:31-32 "வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்".

"அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்".

❖ ஒவ்வொரு நாளும் நமது ஆண்டவருக்காக சிறியதாக எதையாவது செய்துக்கொண்டே இருப்போம்! அவர் அதை பெரிய காரியமாக்குவார்.

# சபைக்கு பயன்படாதவர்கள்!

- ❖ எல்லா உறுப்புகளும் வேறு வேறாயினும் ஒன்றோடொன்று இசைந்திருந்தாலே சரீரம் இயங்கும் [1 கொரி 12:12]
- ❖ பிரிவினையை விரும்புகிறவர்கள் இணைந்து செயல்பட மறுப்பதால் உடலாகிய கிறிஸ்துவின் சபையை ஊனமாக்குகிறார்கள்.

**I தப்பெண்ணம் கொண்டு சிந்திப்போர்.**

யோவான் 3 : 9 – 10 "அதற்கு நிக்கொதேமு : இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?".

**II தியோத்திரேப்பு போன்றவர்கள்.**

அ. சபையில் தலைவர்களும், தலையாக விரும்புகிறவர்களும் பயன்படமாட்டார்கள். சபையில் வேலை செய்பவர்களே தேவை.

ஆ. நீதி 6:16-19-பிரிவினை விதைகளை விதைகிறவர்களை தேவன் எதிர்க்கிறார், வெறுக்கிறார்.

இ. எபி 13:17 "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால், அவர்கள் தூக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடக்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே".

தீர்மானம் செய்கிற விஷயங்களில் சபையின் மூப்பர்கள் அதன் தரம் பெற்றவர்கள். அவர்களையும் (மூப்பர்கள், போதகர்கள்) அவர்களின் வசனத்தின்படியான முடிவுகளையும் எதிர்க்காதீர். அவர்களுக்கு வேதனை தராதீர்கள். அவர்களை எதிர்ப்பவர்கள் சபையின் வளர்ச்சிக்கு உதவுபவர்கள் அல்ல. கீழ்ப்படியுங்கள்! எப்படியென்றால், அப்படியே செயல்பட விரும்புங்கள்.

லூக் 15:28-30 "அப்பொழுது அவன் கோபமடைந்து, உள்ளே போக மனதில்லாதிருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான். அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையே மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர்

ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியை யாவது கொடுக்கவில்லை. வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரே என்றான்".

சில சபைகளில் தாலந்துள்ள விசுவாசிகள், சபை போதகர்களைவிட மற்ற விசுவாசிகளைவிட தன்னையே முக்கியபடுத்தும்படியும், பிரதானமாக நடத்தும்படியும் செயல்படுவார்கள். இப்படிபட்டவர்கள் சபையின் வளர்ச்சிக்கு உதவுவதைவிட தங்களின் வளர்ச்சிக்கே தேவைப்படுவர்.

**III உள்ளேயிருந்து கொண்டே, தேவத்திட்டபடியான முடிவுகளை எதிர்த்து முறுமுறுப்பவர்கள், வளரும் சபைக்கு தேவையில்லாதவர்கள்.**

யோசேப்பின் உடன் பிறந்தவர்களை போன்றோர் (ஆதி 37), வளரும் சபைக்கு தேவையானவர்களா? கசப்புணர்வு, எதிர்புணர்வு, குற்றத்தை பிறரில் தேடுபவர்கள் பொறாமையுள்ளவர்கள்.

ஆதி 37:8 "அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்றுசொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்".

ஆதி 37:11 "அவன் சகோதரர் அவன்மேல் பொறாமைகொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்".

இன்னும் திருசபைகளில் சிலர், சபையின் வளர்ச்சிக்காய் உழைத்து, கொடுத்து பிரயாசப்படுகிறவர்களை யாராவது பாராட்டினால் பொறாமை கொள்கின்றனர். மேலும், இன்றுள்ள சில சபைகளில் தாழ்ந்துள்ள விசுவாசிகளை மட்டம் தட்டியே வைத்திருக்கும் சில போதகர்களும் உண்டு.

**IV யோவான் மாற்கு போன்றவர்கள்.**

அப் 13:13 "பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தைவிட்டுக் கப்பல் ஏறிப் பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள். யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து, எருசலேமுக்குத் திரும்பிப்போனான்".

பிரச்சனைகளை உருவாக்கி கொண்டு, அதினால் பாதிக்கபட்டு பிரிந்து போகிறவர்கள் வளரும் சபையிலே தேவையா ?

லூக் 9:62 "அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்".

இயேசு கூறினார், நீயே முடிவு செய்தாய், நீயே ஆரம்பித்தாய், நீயே பின்னிட்டு திரும்பினாய். இது சூழ்நிலையினால் சரியாக இருக்கலாம். ஆனால் இயேசுவுக்கும், தேவராஜ்ஜியத்திற்கும் தகுதியுற்றவர்களாக நம்மை மாற்றி வருகிறது.

2 பேதுரு 2:20-22 "எச்சூழலிலும் இயேசுவையும், வேதத்தையும் அறிந்தவர்கள் பழைய நிலைக்கு திரும்புவது அல்லது பிரிந்து போவது ஒரு அவமானமே! எனவே, கோபம் வெறுப்பு ஆகியவற்றைகளினாலே சபையைவிட்டு பிரிந்துபோகும் பாவம் செய்யாதிருப்போம்! முன்பைவிட சபையின் காரியங்களில் அதிகம் ஈடுபடுவோம், தேவைகட்களாய் தாராளமாய் கொடுப்போம்! அதின் வளர்ச்சிக்காய் உழைப்போம். அப்பொழுது நாமும் உயர்வோமல்லவா"?

# பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பலிகள்!

**I பழைய ஏற்பாடு அநித்தியமானது**

எபி 8:13 "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது".

❖ புதிய ஏற்பாடு நித்தியமானது.

**II பழைய ஏற்பாட்டு முதல் பிரதான ஆசாரியன் ஆரோன்**

லேவி 16:32 "அபிஷேகம் பெற்றவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாகிய ஆசாரியனே பாவ நிவர்த்தி செய்யக்கடவன். அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய சணல் நூல் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு,".

❖ புதிய ஏற்பாட்டில் இயேசுவே மகாபிரதான ஆசாரியன்.

எபி 4:14 "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகாபிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்".

**III பழைய ஏற்பாட்டில் மிருகங்களின் இரத்தம் உபயோகிக்கப்பட்டது**

லேவி 16:15 "பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரணபலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்தத்தைத் தெளித்தது போல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து".

❖ புதிய ஏற்பாட்டில் இயேசுவின் இரத்தம் உபயோகிக்கப்படுகிறது.

எபி 10:10 "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்."

**IV பழைய ஏற்பாடு: நிறைய பலிகள் தேவைப்பட்டது**

எபி 10:11 "அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும் பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்தி வருகிறவனாயும் நிற்பான்".

❖ புதிய ஏற்பாடு; ஒரே பலி செலுத்தப்பட்டது.

எபி 9:28 "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்".

**VI பழைய ஏற்பாடு: பழுதற்ற மிருகங்கள் தேவைப்பட்டது**

லேவி 22:19 "அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆணைப் பிடித்துவத்து செலுத்துவார்களாக".

❖ புதிய ஏற்பாடு; பூரணமான குற்றமற்ற வாழ்வு பலியிடப்பட்டது.

எபி 5:9 "தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணாகி".

**VII பழைய ஏற்பாடு: ஆசரிப்புகூடாரத்தை நெருங்க ஜாக்கிரதை வேண்டும்**

லேவி 16 : 2 "கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன் ; ஆதலால் உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின்மேலுள்ள கிருபாசன மூடிக்கு முன்பாகச் சகல வேளையிலும் வரவேண்டாம் என்று அவனுக்குச் சொல்".

❖ புதிய ஏற்பாடு: தேவனுடைய சிங்காசனத்தை நெருங்க நம்பிக்கை ஊட்டுகிறது.

எபி 4:16 "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்".

**VIII பழைய ஏற்பாடு புதிய முறையை முன்னோக்க உதவியது**

எபி 10:1 "இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது".

❖ புதிய ஏற்பாடு: பழைய முறைமையை புறம்பே தள்ளியது.

எபி 10:9 "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்".

# நியாயப்பிரமாணம்

- கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றுகிற அனைவருமே நிச்சயமாக அறிந்துக்கொள்ள வேண்டிய பாடம் இது.
- இஸ்ரவேலர்கள் அறிவில்லாமையினாலே (அறிந்திருக்க வேண்டியவைகளை அறியாமலிருந்து) சங்காரமானார்கள் என்று தேவனே சொல்கிறார்.
- தேவன் மீது நம்பிக்கை வைத்து, கிறிஸ்துவின் இரத்தத்தாலே மீட்பை பெற்றுக்கொண்டு, ஆவியானவராலே வழிநடத்தப்படுகிற ஒவ்வொருவரும் நிச்சயமாகவே அறிந்து நிச்சயித்துக்கொள்ள வேண்டிய பாடம் இது.
- நியாயப்பிரமாணம் சர்வ வல்ல தேவனால், மோசேயின் மூலமாக எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுதலையாகி கானான் தேசத்திற்கு வந்த இஸ்ரவேலர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. (உபா 5:1-5).
- வேறு யாராவது நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்க வேண்டுமானால், அவர் யூதமார்க்கப்படி விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டும்.
- அப்படிப்பட்டவர்கள் யூதமார்க்கத்தமைந்தவர் எனப்பட்டனர்.
- இந்த நியாயப்பிரமானத்தை பற்றி வேதாகமம் கூறுவதை நாம் தெரிந்துக்கொள்வோம்.

**1. நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது.**

ரோம 7:12 "ஆகையால், நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது".

**2. நியாயப்பிரமாணம் நல்லது.**

ரோம 7:16 "இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே".

**3. நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு எதிரானது அல்ல.**

கலா 3:21 "அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே".

**4. நியாயப்பிரமாணம் ஒரு நோக்கத்திற்காக தரப்பட்டது.**

கலா 3:19,20,22-26 "அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது". (வசனம் 19)

**5. நியாயப்பிரமாணம் எவரையுமே நீதிமான்களாக்கவில்லை.**

கலா 2:16 "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப் படுவதில்லையே".

கலா 3:11 "நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே".

**6. நியாயப்பிரமாணத்திற்கு ஒரு எல்லை உள்ளது.**

ரோம 7:1 "நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா?

**7. நியாயப்பிரமாணம் கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்டது அல்லது முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.**

மத் 5:17 "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்".

எபே 2:14-16 "எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக் நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து. சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருகிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானபண்ணி".

ரோம 10:4 "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்".

**8. நியாயப்பிரமாணத்தை மாற்றுவது என்பது தேவசித்தம் (திட்டம்).**

எரே 31:31-34 "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்"

**9. நியாயப்பிரமாணம் விசுவாசத்திற்குரியதல்ல.**

கலா 3:12 "நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரிய தல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்".

**10. நியாயப்பிரமாணம் இன்று நம்மை கட்டப்படுத்தாது.**

கலா 5:18 "ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல".

**11. நியாயப்பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை.**

எபி 7:19 "நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்".

எபி 10:1 "இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது".

**12. நியாயப்பிரமாணம் சாபமானது.**

கலா 3:10 "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே".

கலா 3:13 "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்".

**13. நியாயப்பிரமாணத்திற்கு நாம் மரித்தவர்கள்.**

கலா 2:18 "நான் இடித்துப்போட்டவைகளையே நான் மறுபடியும் கட்டினால், பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்".

**14. நாம் நியாயப்பிரமாணத்தை கடைபிடித்தால் கிறிஸ்துவின் மரணத்தை, தேவ கிருபையை வீணாக்குகிறோம்.**

கலா 2:21 "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே".

**15. நியாயப்பிரமாணம் பெலவீனமானது.**

எபி 7:18 "முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது".

**16. நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டுவிட்டது.**

நாம் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நியாயப்பிரமாணம் தேவனாலே மாற்றப்பட்டுவிட்டது.

எபி7:12 "ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்".

எபி 10:8 "நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும் பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்னபின்பு:".

**இறுதியாக...**

தீத்து 3:9 "புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக்குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்".

# உண்மையுள்ள தேவன்

❖ நம்முடைய தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

1 கொரி 1:9 "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்து தேவன் உண்மையுள்ளவர்"

**I பாவங்களை மன்னித்து நம்மை சுத்திகரிக்க உண்மையுள்ளவர்.**

1 யோவான் 1:7-9 "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". (வசனம் 9)

**II சோதனையினின்று நம்மை தப்புவிக்க உண்மையுள்ளவர்.**

1 கொரி 10:13 "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்".

1 பேதுரு 4:12-13 "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல் கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்".

1 சாமு 15:29 "இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப் பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான்".

**III தீமையினின்று நம்மை காத்துக்கொள்ள உண்மையுள்ளவர்.**

2 தெச 3:3 "கர்த்தரோ உண்மையுள்ளவர்; அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்".

மத் 6:13 "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே".

சங் 34:19 "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்".

எபி 6:18 "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு, இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்".

## IV. நம்மை குற்றமற்றவர்களாக காக்க உண்மையுள்ளவர்.

1தெச 5:23-24 "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்".

எபே 5:26-27 "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும், தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்".

சங் 34:21-22 "தீமை துன்மார்க்கனைக் கொல்லும்; நீதிமானைப் பகைக்கிறவர்கள் குற்றவாளிகளாவார்கள். கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார்; அவரை நம்புகிற ஒருவன்மேலும் குற்றஞ் சுமராது"

தீத்து 1:3 "பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம்பண்ணி, அதைக்குறித்த நம்பிக்கையைப்பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி".

## V. வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையுள்ளவர்.

எபி 11:11 "விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, காப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்".

ரோம 4:20-21 "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்".

எண் 23:19 "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?"

# மத்தேயு புத்தகத்தில் ஜெபம்

**I. ஜெபம் – ஏன் செய்ய வேண்டும்?**

❖ தேவன் எதிர்பார்க்கிறார்.

மத் 6:9 "நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக".

மத் 7:7 "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்".

**II. ஜெபம் – எப்படி செய்ய வேண்டும்?**

அ. தனியாக

மத் 14:23 "அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்".

ஆ. அந்தரங்கமாக

மத் 6:6 "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்".

இ. எளிமையாக (அலப்பாமல்)

மத் 6:7 "அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்"

ஈ. அறிந்திருந்து

மத் 6:8 "அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்".

உ. விழித்திருந்து

மத் 26:41 "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்".

ஊ. தேவ சித்தப்படி

மத் 26:42 "அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான்

பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்".

எ. விசுவாசத்துடன்

மத் 21:22 "மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீரகளோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்".

**III ஜெபம் – யாருக்காக செய்ய வேண்டும்?**

அ. அவமானப்படுத்துகிறவர்களுக்காக, துன்பப்படுத்துகிறவர்களுக்காக

மத் 5:44 "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்".

ஆ. சபைக்காக

மத் 6:10 "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக".

இ. நமக்காக (அன்றன்றுள்ள ஜீவியத்திற்காக)

மத் 6:11,13 "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே".

**IV ஜெபமும் ஜீவியமும்...**

அ. தேவனிடத்திலே மன்னிப்பு கோரும் முன்பு, நாம் மன்னிக்க வேண்டியவர்களை மன்னிக்க வேண்டும்.

மத் 6:12 "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்".

ஆ. ஜெபமும் வாழ்க்கையும் ஒன்றாக இருக்க வேண்டும்.

மத் 23:14 "மாயக்காரராகிய வேதபாரகரே ! பரிசேயரே ! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்".

இ. ஜெபம், நமக்குள்ளே இருக்கிற பிசாசுகளை(கெட்டகுணங்களை) துரத்த வேண்டும்.

மத் 17:21 "இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்".

# தானியேலின் வெற்றியுள்ள ஜெபம்

- தானியேல் ஜெப வீரன் என்பது நாம் அறிந்ததே!
- அவனது ஜெப ஜீவியமே அவனது வெற்றியுள்ள வாழ்க்கைக்கு அடித்தளம் ஆகும்.
- தானியேல் ஜெபித்து முடிக்கும் முன்பே அவனுடைய ஜெபத்திற்கு பதில் கிடைத்தது - தானி 9:20-23
- **அவனது ஜெபங்கள் வெற்றியுள்ளதாக இருக்க காரணமாக இருந்தது என்ன?**

**I தாழ்மை**

தானி 9:3 "நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி".

**II தேவனை புகழ்ந்தது**

தானி 9:4 "என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கைசெய்து: ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே".

**III பாவ அறிக்கை செய்தது**

தானி 9:5-6 "நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம்".

**IV தேவனை அறிந்து ஜெபித்தது**

தானி 9: 2 "எருசலேமில் சம்பவித்ததுபோல வானத்தின்கீழ் எங்கும் சம்பவியாதிருக்கிற பெரிய தீங்கை எங்கள்மேல் வரப்பண்ணினதினால், அவர் எங்களுக்கும் எங்களை நியாயந்தீர்த்த நியாயாதிபதிகளுக்கும் விரோதமாகச் சொல்லியிருந்த தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினார்".

தானி 9:14 "ஆதலால் கர்த்தர் கவனமாயிருந்து, அந்தத் தீங்கை எங்கள்மேல் வரப்பண்ணினார்; எங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் செய்து வருகிற தம்முடைய கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர்; நாங்களோ அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்".

**V கெஞ்சி (அழுது)**

தானி 9:17 "இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சு தலையும் கேட்டு, பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தனத்தின்மேல் ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்".

தானி 9:19 "ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைக் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்".

**VI** ***தன்னிலை உணர்ந்து ஜெபித்தது***

தானி 9:7-8 "ஆண்டவரே, நீதி உமக்கே உரியது; உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம் உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள் இந்நாளில் இருக்கிறபடியே, வெட்கம் எங்களுக்கே உரியது".

**VII** ***நம்பிக்கையுடன் ஜெபித்தது***

தானி 9:10"ஆனாலும் எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு".

தானி 9:18 "என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்".

**VIII** ***துன்பங்களை ஏற்றுக்கொண்டு ஜெபித்தது***

தானி 9:11 "இஸ்ரவேலர் எல்லாரும் உமது நியாயப்பிரமணத்தை மீறி, உமது சத்தத்துக்குச் செவிகொடாமல் விலகிப்போனார்கள். அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; ஆகையால் தேவனுடைய தாசனாகிய மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபமும் ஆணையாககினையும் எங்கள்மேல் சொரியப்பட்டன".

தானி 9:13 "மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே இந்தக் தீங்கெல்லாம் எங்கள்மேல் வந்தது; ஆனாலும் நாங்கள் எங்கள் அக்கிரமங்களை விட்டுத் திரும்புகிறதற்கும், உம்முடைய சத்தியத்தைக் கவனிக்கிறதற்கும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினதில்லை".

**IX** ***துன்பங்களுக்கு காரணம் நாங்கள் தான் என்று ஒப்புக்கொண்டு ஜெபித்தது***

தானி 9:15,16 "இப்போதும் உமது ஜனத்தைப் பலத்த கையினால் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணி, இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி, உமக்குக் கீர்த்தியை உண்டாக்கின எங்கள் தேவனாகிய ஆண்டவரே, நாங்கள் பாவஞ்செய்து, துன்மார்க்கராய் நடந்தோம்".

# ஆராதனை வேளையில் இருக்க வேண்டிய மனோநிலை

சங் 122:1 "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்".

❖ **தேவ சித்தத்திற்கு என்னை கீழ்ப்படுத்துவேன் என்ற மனநிலை**

அப் 10:33 "அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான்".

❖ **பிறரை மன்னிப்பேன் என்ற மனநிலை**

மத் 18:21-22 "அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து : ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்".

❖ **தியாகம் செய்யும் மன நிலை**

ரோம 12:1-2 "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்".

❖ **தாழ்மையுள்ள மனோநிலை**

யாக் 4:6 "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்று சொல்லியிருக்கிறது".

❖ **ஜெபிக்கும் மனோநிலை**

யாக் 5:16 "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது".

❖ **மகிழ்ச்சியான மனோநிலை**

சங் 51:12 "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்".

# பாடுகளுக்கு காரணம்...

யாக் 1:16 - 18;1 பேது 4:12 - 16

முகவுரை :

- ❖ நல்லதற்கானாலும் கெட்டதற்கானாலும் பாடுகள் உண்டு.
- ❖ அதாவது, எல்லோரும் ஏதாவது ஒரு விதத்தில் பாடுபடுகின்றனர் என்று தேவ வார்த்தை கூறுகிறது.

## I. ஒருவேளை நமது சொந்த செயல்களின் விளைவாக இருக்கலாம்...

- ❖ இயற்கை சட்டங்களினால் ஆளப்படுகின்ற உலகை தேவன் படைத்தார்

கலா 6:7-8 "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறனோ அதையே அறுப்பான்".

- ❖ இந்த சட்டங்களை மீறினால் மோசமான விளைவுகளை சந்திக்கக் கூடும்.
- ❖ எது நம்மை மெய்யாகவே வேதனைக்குள்ளாக்கிறது.

## II. சாத்தானின் செயலின் விளைவாக பாடுகளை நாம் சந்திக்க நேரிடலாம்

- ❖ சில பாடுகளுக்கு சாத்தான் காரணம்.

யோபு 1:6 - 12; யோபு 2:1 - 6

1 பேதுரு 5:8-9 "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கொச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்".

- ❖ சாத்தானுக்கு ஒரு வரையறை உண்டு.

1 கொரி 10:13 "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை.தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்".

## III. தேவனுடைய சிட்சையாக இருக்கலாம்

- ❖ பழைய, புதிய ஏற்பாடுகளில் தேவனுடைய சிட்சை போதிக்கப்பட்டிருக்கின்றது.

பழைய ஏற்பாடு

உபா 8:5 "அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது கல்லுகள் இரும்பாயிருக்கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்".

நீதி 3:1-12

ஆ. புதிய ஏற்பாடு

வெளி 3:19 "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் ; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு".

எபி 12:5-8 "அன்றியும் : என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும் போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே".

**IV *தேவன் ஏன் தன் பிள்ளைகளை சிட்சிக்கிறார்?***

அ. நம்முடைய நன்மைக்காக

எபி 12:9 "அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் தம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா"?

எபி 12:10 "அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்".

எபி 12:11 "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்".

ஆ. நமது நித்திய நன்மைக்காக

1 கொரி 11:32 "நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாத படிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்".

## V எப்பொழுது தேவன் சிட்சிக்கிறார்?

1 கொரி 11:31 "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படடோம்".

## VI எப்படி தேவன் சிட்சிக்கிறார்?

ஆமோஸ் 4:6 - 12

அப் 8:1-4 "அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயாசமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். தேவபக்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம்பண்ணி, அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள். சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக்கொண்டிருந்தான். சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்".

யாக் 5:15 "அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்".

முடிவுரை:

- ❖ நாம் அவருடன் நெருங்கி சேர பாடுகளை அனுமதிக்கிறார்.
- ❖ நாம் அவருடன் நெருங்கி சேர பாடுகளை உபயோகிக்கிறார்.
- ❖ இப்பொழுது மரித்து எப்பொழுதும் அவருக்காக ஜீவிக்க.
- ❖ தாமதிக்கிறதென்ன? எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொண்டு ஞானஸ்நானம் பெற!

# ஆராதனை அல்லது சபை கூடுதலின் நோக்கம்

## I கர்த்தரின் கட்டளையை நிறைவேற்றுதல்

எபி 10:25 "சபைகூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்".

## II ஒருவரை ஒருவர் சீர்செய்து ஊக்கப்படுத்த

எபி 10:24 "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து".

## III இரட்சகரை நினைவு கூற

1 கொரி 11 : 24, 25 "ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்குக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்".

## IV சிந்தனையை கழுவி தூய்மைப்படுத்த

யோவா 17:17 "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்".

## V மகிமையை தேவனுக்கு கொடுக்க

அப் 2:47 "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்".

## VI மனிதரின் தேவைகளில் உதவ

யாக் 1:27 "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும்படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது".

**VII பாதுகாப்பு பெற**

சங் 84:3 "என் ராஜாவும் என் தேவனுமாகிய சேனைகளின் கர்த்தாவே, உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும், தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே".

❖ ***கலங்கின ஆவியை சாந்தமும், அமைதியுமாக்க ...***

1 சாமு 1:18 "அப்பொழுது அவள்: உம்முடைய அடியாளுக்கு உம்முடைய கண்களிலே தயை கிடைக்கக்கடவது என்றாள்; பின்பு அந்த ஸ்திரீ புறப்பட்டுப்போய், போஜனஞ்செய்தாள்; அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை".

❖ ***தன்னைவிட பலம்பொருந்தின வல்லமையை அடையாளம் கண்டுக்கொள்ள***

சங் 91:1 "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லருடைய நிழலில் தங்குவான்"

❖ ***அன்பையும், நன்றியையும் வெளிப்படுத்த***

சங் 116:12-13 "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்".

❖ ***மகிழ்ச்சியடைய***

சங் 122:1 "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்".

# நீதிமான்

❖ மனிதன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாக முடியாது; தேவனுக்கு முன்பாக அவன் தன்னை நீதிமானாக உயர்த்தவும் முடியாது!

யோபு 4:17 "மனுஷன் தேவனைப்பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ? மனுபுத்திரன் தன்னை உண்டாக்கினவரைப் பார்க்கிலும் சுத்தமாயிருப்பானோ?"

யோபு 9:2 "ஆம், காரியம் இப்படியிருக்கிறது என்று அறிவேன்; தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?"

யோபு 25:4 "இப்படியிருக்க, மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி?"

**I நீதிமானின் பண்புகள்:**

**1 பிறர் மேல் பலிபோடாதவன். தன்னை நீதிமானாக காண்பிக்க மற்றவர்களை குற்றவாளியாக்காதவன்.** (எ.டு) – இயேசு, யோசேப்பு

யோபு 40:8 "நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ? நீ உன்னை நீதிமானாக்கிக் கொள்ளும்படிக்கு என்மேல் குற்றஞ் சுமத்துவாயோ?".

**2 துன்பங்களை சகிக்கிறவன்**

சங் 34:19 "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்".

**3 தேவனால் அறியப்பட்டவன்**

சங் 11:5 "கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்; துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது".

**4 கர்த்தருக்கு பிரியமானதை பேசுகிறவன்**

சங் 37:30 "நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்".

நீதி 10:21 "நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்; மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள்".

நீதி 10:32 "நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளைப் பேச அறியும்; துன்மார்க்கருடைய வாயோ மாறுபாடுள்ளது".



6

நீதி 15:28 "நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்; துன்மார்க்கனுடைய வாயோ தீமைகளை கொப்பளிக்கும்".

**5. தேவனை நம்புகிறவன்**

சங் 64:10 "நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்; செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்".

**6. *சபை கூடி வருதலை தவறவிடாதவன்***

சங் 118:20 "கர்த்தரின் வாசல் இதுவே; நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள்".

சங் 68:3 "நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து, ஆனந்த சந்தோஷமடைவார்கள்".

**7. தேவனை துதிப்பவன்**

சங் 140:13 "நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள்; செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம் பண்ணுவார்கள்".

**8. கற்றுக்கொள்ளும் மனப்பக்குவமுடையவன்**

நீதி 9:9 "ஞானமுள்ளவனுக்குப் போதகம்பண்ணு, அவன் ஞானத்தில் தேறுவான்; நீதிமானுக்கு உபதேசம்பண்ணு, அவன் அறிவில் விருத்தியடைவான்".

**9. இரக்கமுள்ளவன்**

நீதி 12:10 "நீதிமான் தன் மிருகஜீவனைக் காப்பாற்றுகிறான்; துன்மார்க்கருடைய இரக்கமும் கொடுமையே".

நீதி 29:7 "நீதிமான் ஏழைகளின் நியாயத்தைக் கவனித்தறிகிறான்; துன்மார்க்கனோ அதை அறிய விரும்பான்".

**10. பொய்யை வெறுக்கிறவன்**

நீதி 13:5 "நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான்; துன்மார்க்கனோ வெட்கமும் இலச்சையும் உண்டாக்குகிறான்".

**11. *தன் மரணத்தை குறித்து நம்பிக்கையுள்ளவன்***

நீதி 14:32 "துன்மார்க்கன் தன் தீமையிலே வாரிக்கொள்ளப்படுவான்; நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்".

**12. கர்த்தருடைய வழியிலே உத்தமாய் நடக்கிறவன்**

ஓசி 14:9 "இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க

புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்".

நீதி 20:7 "நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்".

**13. தாராளமாய் கொடுக்கிறவன்**

நீதி 21:26 "அவன் நாள்தோறும் ஆவலுடன் இச்சிக்கிறான்; நீதிமானோ பிசினித்தனமில்லாமல் கொடுப்பான்".

**14. தேவனுடைய கைக்குள் அடங்கியிருப்பவன்**

பிர 9:1 "இவை எல்லாவற்றையும் நான் என்மனதிலே வகையறுக்கும்படிக்குச் சிந்தித்தேன்; நீதிமான்களும் ஞானிகளும், தங்கள் கிரியைகளுடன், தேவனுடைய கைவசமாயிருக்கிறார்கள்; தனக்குமுன் இருக்கிறவர்களைக்கொண்டு ஒருவனும் விருப்பையாவது வெறுப்பையாவது அறியான்".

**15. விசுவாசத்தினாலே பிழைக்கிறவன் (வாழ்கிறவன்)**

ரோம 1:17 "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது".

**16. ஊக்கமாக ஜெபிக்கிறவன்**

யாக் 5:16 "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது".

**17. இயேசுவின் இரத்தத்தாலே கழுவப்பட்டவன்**

ரோம 5:9 "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே".

**இறுதியாக**

சங் 37:25 "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை".

நீதி 10:6 "நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்; கொடுமையோ துன்மார்க்கனுடைய வாயை அடைக்கும்".

# ஓடுங்கள்

தேவனை நம்புகிற நாம் ஓட்டபந்தய வீரராக அழைக்கப்பட்டுள்ளோம். நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே நாம் தடம் மாறாமல் ஓட வேண்டும்.

## I. பாவத்தை விட்டு ஓடுங்கள்!

❖ யோசேப்பு பாவத்தை விட்டு ஓடினான்

ஆதி 39:18 "அப்பொழுது நான் சத்தமிட்டுக் கூப்பிட்டேன், அவன் தன் வஸ்திரத்தை என்னிடத்தில் விட்டு வெளியே ஓடிப்போனான் என்றாள்".

2 தீமோ2:22 "அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு".

## II. பண ஆசையை வெறுத்து ஓடுங்கள்!

❖ கேயாஸி பணத்திற்காக ஓடினான்

2 ராஜா 5:20-21 "தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் கேயாசி என்பவன், அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார் ; நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு, நாகமானைப் பின்தொடர்ந்தான்; அவன் தன் பிறகே ஓடிவருகிறதை நாகமான் கண்டபோது, அவனுக்கு எதிர்கொண்டுபோக இரதத்திலிருந்து குதித்து: சுகசெய்தியா என்று கேட்டான்".

எபி 13:5 "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே".

2 ராஜா 5:26 "அப்பொழுது அவன் இவனைப் பார்த்து : அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்பகிறபோது என் மனம் உன்னுடன்கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?"

**III. இயேசுவிற்கு பணிவிடை செய்ய ஓடுங்கள்!**

❖ யோவான் ஸ்நானகன், இயேசுவிற்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி பணிவிடை ஓட்டம் ஓடினான்

அப் 13 : 25 "யோவான் தன் பணிவிடை ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது : நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள், நான் அவர் அல்ல; இதோ, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான்".

யோவா 1:15 "யோவான் அவரைக்குறித்துச் சாட்சிகொடுத்து: எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர்; ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்".

**IV. இயேசுவைக் காண ஓடுங்கள்!**

❖ சகேயு இயேசுவைக் காண இயேசுவிற்கு முன்பதாக ஓடினான்

லூக் 19:3-4 "இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன்குள்ளனான படியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி,அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்".

❖ நாம் இயேசுவைக் காண வேகமாக ஓட வேண்டும்

மத் 18:20 "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்".

ஆராதனை, வேத ஆராய்ச்சிக்கு இயேசு வருவதற்கு முன்பாகவே நீங்கள் சென்று காத்திருக்கிறீர்களா? அல்லது இயேசுவைக் காக்க வைக்கிறீர்களா?

**V முன்னானவைகளை நாடி ஓடுங்கள்!**

❖ பவுல் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி ஓடினான்

பிலி 3:12-14 " சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னாவைகளை நாடி" (வசனம் 13)

**VI சுயத்தைக் கட்டுப்படுத்தி ஓடுங்கள்!**

❖ பவுல் தன்னைத்தானே ஒடுக்கி, கீழ்படுத்தி ஓடினார்

1 கொரி9:24-27 "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச்

செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாத படிக்கு, என் சரீரத்தைஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்".

**VII நித்திய ஜீவனுக்காக ஓடுங்கள் !**

❖ **லோத் தன் ஜீவனை தற்காலிகமாக காப்பாற்ற ஓடினான்**

ஆதி 19:17-20 "அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்". (வசனம் 17)

❖ **நாம் நித்திய ஜீவனை பெறத்தக்கதாக ஓட வேண்டும்**

1 கொரி 9:26 "ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன்".

1 யோவா 2:25 "நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்".

**VIII பொறுமையாக இயேசுவை நோக்கி ஓடுங்கள் !**

எபி 12:1 "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்".

# சத்தியம்

யோவா 18:38 "அதற்குப் பிலாத்து : சத்தியமாவது என்ன என்றான்".

❖ **தேவன் சத்தியமுள்ளவர்**

யாத் 34:6 "கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்".

உபா 32:4 "அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன் ; அவர் நீதியும் செம்மையுமானவர்".

❖ ***கிறிஸ்து சத்தியமானவர்***

யோவா 14:6 "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்".

❖ ***ஆவியானவர் சத்தியமானவர்***

யோவா 14:16-17 "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்".

1 யோவா 5:6 "இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும், வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர்".

**சத்தியம் (உண்மை) என்னும் சொல் வாய்மை, நேர்மை உள்ள தன்மை போன்ற பல பொருள்களில் ஆளப்படுகின்றது.**

**I *சத்தியம் என்பது என்ன?***

❖ தேவனுடைய வசனம்

சங் 119:142 "உம்முடைய நீதி நித்திய நீதி, உம்முடைய வேதம் சத்தியம்".

சங் 119:160 "உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்".

❖ இயேசு கிறிஸ்து

யோவா 1:14 "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது".

யோவா 14:6 "அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்".

## II சத்தியம் எவ்வாறு நமக்கு கிடைத்தது?

யோவா 1:17 "எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின".

## III சத்தியத்தை பேசுங்கள்

1 தீமோ 2:4 "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்".

❖ **சத்தியத்தை பேசினால், அதற்கு உலகத்தின் வரவேற்பு மிகவும் பயங்கரமானதாக இருக்கும்.**

யோவா 8:40 "தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே".

கலா 4:16 "நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ?"

❖ **சத்தியத்தை பேசுவதினால் சங்கடம் வரும்; ஆனால் பேசினால் தான் பரலோகம்.**

சங் 15:1-2 "கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே".

லூக் 20:21 "அவர்கள் வந்து: போதகரே, நீர் நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறீரென்றும், முகதாட்சணியமில்லாமல் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும் அறிந்திருக்கிறோம்".

❖ **சத்தியத்தை அடக்கி வைப்பது அநியாயம். அநியாயமாக சத்தியத்தை அடக்கி வைப்பவர்களுக்கு, தேவ தண்டனை நியாயமாக குவித்து வைக்கப்பட்டுள்ளது.**

## IV எவைகள் சத்தியமாகயிருக்கிறது?

❖ **கர்த்தருடைய செயல்கள்**

சங் 33:4 "கர்த்தருடைய வார்த்தை உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது".

தானி 4:37 "ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்".

❖ **கர்த்தருடைய ஆலோசனைகள்**

ஏசா 25:1 "கர்த்தாவே, நீரே என் தேவன்; உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன்; நீர் அதிசயமானவைகளைச் செய்தீர்; உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்".

❖ **கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு**

ரோம 2:2 "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்".

வெளி 16:7 "பலிபீடத்திலிருந்து வேறொருவன்: ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லக்கேட்டேன்".

❖ **கர்த்தருடைய வழிகள்**

வெளி15:3 "அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்".

## V கிருபையும் சத்தியமும்...

சங் 85:10 "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்யும்".

சங் 89:14 "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் சத்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்".

நீதி 3:3 "கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்".

யோவா 1:17 "எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின".

## VI சத்தியம் – எனக்கு என்ன கிடைக்கும்?

❖ பாதுகாப்பு

சங் 91:4 "அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்".

❖ பாவ மன்னிப்பு

நீதி 16:6 "கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்".

❖ விடுதலை

யோவா 8:32 "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்".

❖ பரிசுத்த ஆவியின் முத்திரை

எபே 1:13 "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்".

❖ இரட்சிப்பு

2 தெச 2:13 "கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்".

1 தீமோ 2:4 "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்".

## VII சத்தியத்திற்கான நமது பதிற்செயல்கள் (Reaction)...

❖ அதை நேசியுங்கள்.

சகரியா 8:19 "ஆகையால் சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்".

- ❖ அதற்கு கீழ்படியுங்கள்.

1 பேதுரு 1:22 "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குத் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடேஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்".

- ❖ அதற்கு எதிரிகள் உண்டு என அறியுங்கள்.

ரோம 1:25 "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் ஆமென்".

2 தீமோ 2:18 "அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்".

2 தீமோ 3:7 "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்".

- ❖ அப்படிப்பட்டவர்களை விட்டுவிலகுங்கள்.

1தீமோ 6:5 "கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு".

தீத்து 1:13 "இந்தச் சாட்சி உண்மையாயிருக்கிறது; இது முகாந்தரமாக,அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல்".

- ❖ தடைகள் உண்டு என உணருங்கள்.

கலா 3:1 "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத் தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறைப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே".

# விழுந்துபோதல்

மத் 7:13-14ல் சொல்லப்படும் மிகப் பெரிய எச்சரிக்கை என்னவென்றால், அநேகர் விழுந்துவிடுவர், தவற விட்டுவிடுவர் என்பதே!

1 கொரி 10:12 படி நிற்கிறேன் என்று தங்களை எண்ணுகிறவர்கள், விழாதபடி எச்சரிக்கை எண்ணம் மட்டும் போதாது, அதை உறுதிசெய்யவும் வேண்டும்.

❖ **விழுந்துபோகும் நிலை ஏன் ஏற்படுகிறது?**

அ. பாதையில் விழுந்த நிலை.

லூக் 8:13 "கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக்காலமாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்".

ஆ. கீழ்படியாமையால் இந்த நிலை.

எபி 4:11 "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி,ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு,நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்".

இ. அக்கிரமக்காரருடைய வஞ்சகம்.

2 பேதுரு 3:17 "ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து".

ஈ. கிறிஸ்துவை அறியும் அறிவுக்கு பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்வதினால்...

2 பேதுரு 2:20 "கர்த்தரும் இரட்சருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின்அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்".

நீங்கள் விழுந்துப்போகாமல் கடைசி வரை உண்மையாய் இருப்பீர்களா ?

I **நாம் எதிலிருந்து விழக்கூடும் ?**

அ. கிறிஸ்துவை விட்டு கிருபையிலிருந்து வீழ்ச்சி.

கலா 5:4 "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்".

ஆ. இளைப்புள்ளவர்களாய் ஆத்துமாவில் சோர்வு அதாவது சத்தியத்திலிருந்து விலகுதல் வீழ்தல்

எபி 12:3 "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாத படிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்".

## II எதற்குள் வீழ்தல்?

அநேகர் தேவனைவிட்டு வெளியே போய் வீழ்கின்ற வேளையில், உலகத்திற்குள் (அதின் ஆசை விருப்பத்திற்குள்) வீழ்ந்து விடுகின்றனர்.

2 தீமோ 4:10 தேமா பிரிந்துப்போனான்.

இயேசுவும் உலக கவலை, பணம், பொருளாதார மயக்கம் என்று கூறியுள்ளார்.

உலகத்தில் அன்பு கூறுகிறவனிடத்தில் தேவ அன்பு இல்லை.

1 யோவா 2:15 "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை".

அநேகர் பூமியில் நல்ல நிலையையடைய கடும்பிரயத்தனப்படுகின்றனர். அவ்வுலகத்திற்காய் இவ்வுலகை பயன்கொள்ள முயற்சி செய்வதைவிட - இவ்வுலகில் சிறக்க அவ்வுலக அருளை வேண்டுகின்றனர்.

யோவா 6:27 "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்".

## III எதற்காக வீழ்(ச்சி)தல்.

கள்ள போதகர்களுக்கு எச்சரிக்கை

மத் 7:15 "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுக்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்".

எல்லா ஆவிகளையும் நம்பாதே

1 யோவா 4:1 "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்".

# யார் செழித்திருப்பார்கள் ?

- செழிப்பான வாழ்வை நாம் அனைவருமே விரும்புகிறோம்.
- வேதாகமத்திலே நிபந்தனையற்ற ஆசீர்வாதங்களைக் காணமுடியாது.

## I கர்த்தரை நம்புகிறவர்கள்

நீதி 28:25 "... கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்".

## II கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள்

சங் 92:13 "கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள், எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்".

அப் 2:47 "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்".

## III நீதிமான்கள்

சங் 92:12 "நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்".

ரோம 3:24 "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்ட நீதிமான்களாக்கப்படுகிறார்கள்".

## IV செம்மையானவர்கள்

நீதி 14:11 "துன்மார்க்கனுடைய வீடு அழியும்; செம்மையானவனுடைய கூடாரமோ செழிக்கும்".

மத் 25:21 "அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்".

## V மனந்திரும்புகிறவர்கள்

ஓசி 14:4 - 7

லூக் 13:3 "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்".

## VI உபத்திரவத்தை சகித்தவர்கள்

சங் 66:12 "மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்".

1 பேதுரு 4:16 "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்".

## VII உதாரகுணமுள்ளவர்கள்

நீதி 11:25-26 "உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். தானியத்தைக் கட்டிவைக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின்மேல் ஆசீர்வாதம் தங்கும்".

2 கொரி 9:9-11 "வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்"

# பாடுகளை தேவன் ஏன் அனுமதிக்கின்றார் ?

முகவுரை :

- பாடுகள், வேதனை, துக்கத்தை தன் பிள்ளைகளும் அனுபவிக்க தேவன் ஏன் அனுமதிக்கிறார் ?
- யோபுவும், தேவனை விசுவாசிக்கின்ற யாவரும் இந்தக் கேள்வியை கேட்கின்றனர்.

கீழேயுள்ள இந்த கேள்விக்கான பதில்களை நாம் பெற்றுக்கொள்ள தேவனுடைய வார்த்தையை கவனிப்போம் !

பாடுகளை தேவன் ஏன் அனுமதிக்கிறார் ?

கிறிஸ்தவன், இந்த பாடுகள் மத்தியிலும் ஏன் மகிழ வேண்டும்?

**I இந்த உலகம் நம்மை அதிகம் ஈர்க்காதபடி செய்ய**

**அ. நாம் பரதேசிகள், அந்நியர்**

- நம் மெய்யான வீடு இந்த உலகம் அல்ல.
- நமக்கு இதைவிட சிறந்ததை தேவன் ஆயத்தப்படுத்தியுள்ளார்.

1 பேதுரு 2:11 "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி".

எபி 13:14 "நிலையான, நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்".

2 கொரி 5:1,5 "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.

இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே".

**ஆ. எந்த பாடுகளும் இல்லாது இருந்தால்**

- இந்த தற்காலிக உலகத்தை விட்டு விலக நாம் விரும்ப மாட்டோம்
- நித்திய வீட்டை யாரும் விரும்பி அதற்கு ஆயத்தப்படமாட்டார்கள்

**II நம்மில் உள்ள சிறந்ததை பாடுகள் வெளிக்கொண்டு வருகிறது**

**அ. அதை காண முடியும்**

நண்பர்களின் உதவி, உணவுத் தயார் செய்தல், பணம், இயற்கை சீற்றத்தில், வீடு தீப்பிடித்து எரியும் போது, நோய்ப்படுகையில்.

**ஆ. ஒரு வேளை இதனால் தான் முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் மகிழ்ந்தனர்**

நம்முடைய குணாதிசியங்களை வளர்க்கிறது என்று அறிந்திருந்தனர்

ரோம 5:3-4 "அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையயும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்".

**III தேவனுடைய எதிரிகளை அமைதியாக்குகின்றது பாடுகள்**

**அ. பாடுகளில் யோபுவின் பொறுமை சாத்தானை அமைதியாக்கியது.**

**ஆ. மூட மனிதர்களை தேவன் அமைதியாக்க விரும்புகின்றார்.**

1 பேதுரு 2:15 "நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது".

கிறிஸ்துவின் போதனையை முட்டாள்தனமானதாக எண்ணுகிறவர்கள் நன்மை நமக்கு கிடைப்பதால் தான் நாம் கிறிஸ்தவர்களாக இருக்கின்றோம் என்று நம்மை நோக்கி சொல்லுபவர்களுக்காகவும் தான்.

**IV உயர்வாக மதித்து மதிப்பிட செய்கிறது**

**அ. நம் வாழ்வில் அநேக நற்காரியங்களை பெறுகிறோம்**

அவைகள் நம் தகுதியினால் கிடைக்கிறது என்று நினைத்துக் கொள்கின்றோம் இழப்பது இல்லாது இருந்தால்.

**ஆ. நம்மிடத்தில் உள்ளதை மதிப்பிடச் செய்கிறது**

1. நல்ல உடல் நிலை, நல்ல நண்பர்கள், அன்பான குடும்பம்.
2. பிலிப்பி 1:4-8

**V தேவனை சார்ந்து ஜீவிக்க செய்கிறது**

**அ. தங்களை தாங்களே சார்ந்தவர்களாக மாறிவிடுவது எளிது.**

திறமையான தொழில் வல்லுநர்கள் தங்கள் சொந்த கைகளினால் சாதித்தோம் என்று சொல்லும் போது ஒருவர் தேவனை எவ்வாறு சார்ந்திருக்கிறார் என்று தெரிகிறது.

அப் 17:28 "ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்".

**VI நம்மை சுத்திகரிக்க பாடுகள் உதவுகிறது**

1 பேதுரு 1:6-7 "இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்".

யாக் 1:2-5

2 கொரி 4:17 "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது".

எபி 12:11 "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்".

**VII இரக்கமுள்ளவர்களாக நம்மை பாடுகள் மாற்றுகிறது**

பாடுகளில் மதிப்பை குறித்து பவுல் எழுதியுள்ளார்

2 கொரி 1:3-4 "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்".

பாடுகள் நாம் அனுபவித்தப் பிறகு அழுகிறவர்களோடு நாமும் சேர்ந்து அழ முடிகிறது.

**VIII எப்படி ஜெபிக்க வேண்டும் என்று பாடுகள் நமக்கு போதிக்கின்றன**

**அ. பாடுகளின் மத்தியிலும் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று கற்றுக்கொள்கிறோம்**

உண்மையாய்

இடைவிடாது

ரோம 8:26 "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்".

**ஆ. மெய்யான ஜெபத்தின் உதாரணம்**

1. வேதனையுள்ள ஸ்தலத்தில் இருந்த ஐசுவரியவான் [லூக் 16]
2. கெத்சமனே தோட்டத்தில் இயேசு
3. ஸ்தேவான் கல்லெரிந்து கொல்லப்பட்ட போது [அப் 7]
4. தமஸ்குவில் சவுல்

அப் 9:16 "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்".

# தேவனை தொழுதுக்கொள்ளும்பொழுது இருக்க வேண்டிய மனோநிலையும், நாம் பெறும் ஆசீர்வாதமும் – சங் 84

**I இருக்க வேண்டிய மனோ நிலை:**

அவைகள் இனிமை என்று எண்ணம் வேண்டும்.

கர்த்தர் நல்லவர் என்பதை நினைத்து மனதை இனிதாக்க வேண்டும். மகிழ்ச்சி தான் மனதை இனிமையாக்கும். சங் 84:1

தாகமாய், ஏக்கத்துடன், எப்பொழுது கர்த்தரை தொழுதுக்கொள்ளும் நாள் வரும் என்ற ஏக்கத்துடன், காத்திருந்து, சத்தமாக பாடல் பாடி துதித்தலுடன் தொழுகை செய்ய வேண்டும். சங் 84:2

உம்முடைய சமூகத்தில் அவைகளுக்கு கிடைத்தது இடம் எனக்கு கிடைக்குமா? எனக்கும் தரமாட்டீரோ, தாரும் என்ற மறுமைக்குரிய ஆவிக்குரிய எண்ணத்துடன். சங் 84:3

தேவனிலே பெலன் கொள்ளும்படியாகவும், தேவனுக்குள்ளாக நம்முடைய வழிகளை நேராக்கும்படியாகவும். சங் 84:5

தேவனை தொழுதுக்கொள்வது தான் நல்லது; அதை விட சிறந்தது இவ்வுலகில் எதுவும் இல்லை. சங் 84:10

**II ஆசீர்வாதங்கள்:**

1. துக்கம் சந்தோஷமாக மாறும் – சங் 84:6
2. பலத்தின் மேல் பலம் (தேவ பெலம்) – சங் 84:7
3. தேவனிடத்தில் உரிமை கோரலாம் – சங் 84:8
4. தேவனுடைய பாதுகாப்பும், நன்மையும் – 84:9

**இறுதியாக .....**

- ❖ தேவனை நம்புகிறவர்கள், அவரை தொழுதுக்கொள்வார்கள்.
- ❖ தேவனை தொழுதுக்கொள்ளுகிறவர்களே, அவரை நம்புகிறவர்கள். அவரை நம்பிக்கையோடு தொழுதுக்கொள்கிறவர்கள் பாக்கியவான்கள்.

சங் 84:12 – "சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்."

# வேதாகம தேவனுடைய தன்மை !

## I வேதாகம தேவன் வல்லமையுள்ளவர்.

எபேசியர் 1:19 "... தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள்அறியும்படிக்கு..."

சங்கீதம் 19:1 "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.

எபே 1:20 "எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக"

## II வேதாகம தேவன் கிருபையும், இரக்கமும் உள்ளவர்.

எபேசியர் 2:4,6,7 "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்".

❖ இவருடைய கிருபை, இரக்கம் என்பது எப்படி அடையாளம் காட்டப்படுகிறது என்றால், பாவத்தில் நாம் மாட்டிக்கொண்டு அமிழ்ந்து மரித்த நம்மை, அந்த பாவமே இல்லாத அளவுக்கு அதிலிருந்து அவருடைய குமாரனுடைய ரத்தத்தினாலே நம்மை கழுவி, பரிசுத்த தேவனுடைய பிள்ளையாக நம்மை சுவிகரித்திருக்கின்றார். அதற்குக் காரணம் அவருடைய கிருபையும், இரக்கமும் தான்.

தீத்து 3:5 "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்".

## III வேதாகம தேவன் அன்புள்ளவர்.

எபேசியர் 2:4 "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே".

❖ தேவன் மிகுந்த அன்புள்ளவர். LOVE IS GOD, என்று சிலர் இப்படி தவறாக சொல்கிறார்கள். அப்படி சொல்லக்கூடாது! LOVE IS NOT GOD, அன்பு தேவனல்ல; ஒரு பொருளை, ஒரு காரியத்தை நாம் தெய்வமாக மாற்றுகிறோம். அது விக்கிரக ஆராதனைக்கு சமமாயிருக்கிறது.

1 யோவான் 4:8 "அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்".

❖ தேவனுடைய அன்பு பெரியது; ஆனால் அதை பெறுவதற்கு ஒரு வரையறை இருக்கிறது.

**IV வேதாகம தேவன் கோபமுள்ளவர்**

❖ எபி 10 : 26-31; எபி 2 : 1-4

இந்த வேதாகமத்தின் தேவன் கடுங்கோபமுள்ளவராயிருக்கின்றார். இயேசுகிறிஸ்துவினாலே வருகின்ற இரட்சிப்பை உதாசினம் செய்கின்றவர்களை அவர் தண்டிக்கின்றபடியினாலே இந்த தேவனுக்கு பயந்து, அவருடைய தன்மைகளில் நம்மை வளர்த்துக்கொள்ள தேவன் நமக்கு கிருபை செய்வாராக!